7

# செங்கதிர்



-/60

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Appropriate Technology Services
121, POINT· [illegible] ROAD
NALLUR, [illegible]NA
No ____________

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Appropriate Technology Services
121, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA
No. 1406




"அறிவு என்னும்
ஆதவன்
சிந்தும் ஒளியே
செங்கதிராகும்"

| | | |
|---|---|---|
| அஞ்சல் மூலம் அஞ்சலி | — | 2 |
| எம்முரை | — | 5 |
| பிற கிரகங்களிலுள்ள உயிரினங்களுடன் பேசலாம்! | — | 7 |
| அழகுக்கும் ஆகாரத்திற்கும் சூரியகாந்தி | — | 10 |
| விஞ்ஞானக் கூத்து | — | 12 |
| யாழ் நிலா | — | 15 |
| எமது நாடும் நிலையற்ற உலகச் சந்தை விலைகளும் | — | 20 |
| அணு ஆக்கத்திற்கா அல்லது அழிவிற்கா? | — | 24 |
| மென் கதிர் | — | 27 |
| பெண்கள் விடுதலை இயக்கம் | — | 29 |
| சிந்தனைக்கு ஒரு விருந்து | — | 32 |
| நல்லதொரு வீடு கட்ட | — | 33 |
| சிந்தனை செய் மனமே | — | 35 |
| செய்திக் கதிர் | — | 38 |
| புதிர்க் கதிர் | — | 41 |
| தென்னையும் திணறலைவக்குள்! | — | 42 |
| நெஞ்சில் நிறைந்த நினைவுகள் | — | 43 |

(இச் சஞ்சிகையில் வெளிவரும் கருத்துக்களுக்கு அவற்றை எழுதியவரே பொறுப்பானவர். கதைகள் யாவும் கற்பனை)

அட்டைப் படம் விளக்கம் : 10-ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# SENGKATHIR


| | |
|---|---|
| Executive Editor: | Ponna Kumarasuriyar |
| Associate Editors: | K. T. Indralingam<br>Miss Pushpa Manicam<br>*Dip-in-Journalism*<br>M. L. M. Iqbal, B. A. (Cey.)<br>P. Sivananda Sarma<br>*(Sivam)* |
| Art Work: | N. T. Moorthy |
| Proprietors & Publishers: | Sunzsons Tuition Service<br>P. O. Box 47<br>Jaffna, Sri Lanka. |
| Production: | Vivekananda Press<br>Vivekananda Building<br>Jaffna. |
| Registered Office: | No. 60, Punyankulam Road<br>West Colombuthurai<br>Jaffna, Sri Lanka. |


## சந்தா விபரம்

(தபால் மூலம்)

| | | |
|---|---|---|
| தனிப்பிரதி | சதம் | .60 |
| 6 மாதம் | ரூபா | 4.00 |
| 1 வருடம் | ,, | 7.00 |
| 2 வருடங்கள் | ,, | 12.00 |

## FOREIGN SUBSCRIPTION RATES

(AIR MAIL) 12 Issues

| | |
|---|---|
| Malaysia & Singapore | S $ 5 |
| U. S. A. & Canada | U S $ 2 |
| U. K. | Sterling £ 1 |
| Other Countries (Excluding-India) | U S $ 2 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அஞ்சல் மூலம் அஞ்சலி

நெடுங்காலக் குறையினை நிறைவாக்கி புதுமுறையில்
மலர்ந்த செங்கதிர் மானிலத்தில் மங்காது ஒவிரட்டும்
மலர்ந்த இதழுக்கு வாசகரும் வளரட்டும்
மணமார அகற்கு அடியேனும் வாழ்த்துகிறேன்

105/1, நாவலர் வீதி
யாழ்ப்பாணம் — செல்வி எஸ். எம். கஸீரு

மக்களின் அறிவையும் ஆற்றலையும் பெருக்கிப் புத்துணரச்சியூட்ட மலர்ந்திருக்கும் செங்கதிரின் இனிமை கண்டபின் ஒரு வேண்டுகோள்: செங்கதிரை மாதம் இருமுறை வெளியிட்டால் என்ன?

விளாவை
காரைநகர் — கே. பாலசிங்கம்

மாதந்தோறும் பூரிப்புடன் மலரும் செங்கதிரில் சென்ற இதழ் தொட்டு முற்றிலும் புதுமையான அம்சங்களைக் கண்ணுற்றேன் மாலர்றிலும் புதுமையான கவர்ச்சிகரமான மிகவும் அழகிய முறையில் கவர்ச்சியளித்த அட்டைப்படம் மிகவும் அபாரம்!

சிறுகதையொன்று எழுதியிருக்கிறேன்; அனுப்பினுல் செங்கதிரில் பிரசுரிப்பீர்களா?

146, பூவெளிக்கடை
ஹன்தெஸ்ஸ, கண்டி — எஸ். ஏ. எம். நியாஸ்

(அனுப்பிவையுங்கள், தகுதி கண்டு பிரசுரிக்கப்படும்) — ஆ-ர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## N. M. Sultan Mohideen Hadjiar & Bro.

*Dealers in:* Fancy Goods, Presentation Articles, Sundries, Stainless Steel Wares, Glass, Enamel & Aluminium Wares Stationery Groceries, Oilmans Etc. Etc.

**123, 125, 143, K. K. S. ROAD**
**JAFFNA**

**No. 2, New Market**
**Hospital Road — Jaffna**

*T'Phone:* **531** *Grams:* "ENEMES"


## புதிர்க்கதிர் 7

### போட்டிப் படிவம்

பெயர் ..............................

விலாசம் ..............................

தொழில் ..............................

போட்டியின் பெயர் ..............................

..............................
கையொப்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்முரை

# இன்றைய இளைஞரும் உணவு உற்பத்தியும் அரசின் ஆதரவும்

வழி முறையாக, நாம் அடிக்கடி கேட்டும் அறிந்தும் வரும் வாசகங்கள் தான் இவை. ஆனால் சமீபத்தில் இவை பற்றித் தாராள மாக பக்கம் பக்கமாக வரையப்படுகின்றது. உணவு உற்பத்தியைப் பற்றி நாம் விரிவாக வரையத் தேவையில்லை. தானாகவே புரியக்கூடிய வாசகமே. ஆனால் அரசின் ஆதரவு என்பது பற்றி விளக்கம் பல தேவை யென்றே கூறலாம். பேரவைகளிலும் மேடைகளிலும் பேசப்படும் பெரும் பேச்சுக்கள், உண்மையிலேயே கருத்துள்ளவைகளாக அமையுமானால் இன்றைய இளைஞர் இசைவுடனும், இன்முகத்துடனும் ஏர் முனையை நாடுவர். சீராக விவசாய அபிவிருத்தியில் நாட்டங் கொள்வர் என்று நாம் கூறத் தேவையில்லை.

ஆனால், வானொலியிலும் பத்திரிகைகளிலும் வழிமுறைகளையும் பலாபலன்களையும், சமைத்துத் தன்னுவதினால் நாம் எவ்வாறு எமது இளைஞரை விவசாயத்தில் நாட்டங்கொள்ள வைக்க முடியும்? ஓங்கிவரும் இளைஞர் வேலையில்லாத் திண்டாட்டம் தேங்கி நிற்கும் நமது நாட்டின் பொருளாதாரம் சுருங்கி வரும் சமுதாய அமைதியின்மை யாவும் எம்மை எங்கு கொண்டு செல்லுமோ என்று யாம் அஞ்சுகின்றோம்.

பசியில் வதங்கினாலும் படித்தவர் பட்டம் பெற்றவர், பயிர்ச் செய்கையில் நம்பிக்கையிழந்து நிற்பது அவரவர் பொருளாதார நிலைமையென்பது யாவரும் அறிந்த உண்மை. பதவியிலிருந்தார், பணம் படைத்த பாவை மட்டுமல்ல தினம் ஒரு புகழ், கணம் ஒரு கௌரவம் என்றெல்லாம் கிட்டும் எனப்பரம்பரை பரம்பரையாக நம்மவர் கூறுவர். ஆனால் இந்நிலைமை அதி வேகமாக மாறிவரும் அதே சமயம் அரசும் அதிகவனமாக அகன்ற அடிப்படையில் அதன் அக்கறையையும் ஆதரவையும் விவசாயத்தில் ஈடுபட்ட யாவருக்கும் யாமறிந்தவரையில் நேரடியாகவே அளிக்க முன்வரவேண்டும். பொதுவாக வேளாண்மையில் ஈடுபடும் மக்கள் படித்தவர்களுள் இரு பகுதி தெரிந்தவை ஒருசாரார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதவியில் பதுக்கும் பணத்திற்கு வரி குறைக்க வசதியாக வழிவகுக்க எத்தனிப்பவர். மற்றவர்தமது பதவியிலிருந்து ஓய்வு பெற்று நேரத்தை ஒருவாறு சமாளிக்க முயலுபவர். ஆனால் அரசு உண்மையில் ஒரு சிறு பகுதியினர் தன் நாட்டமாக படித்தபின்னும் பயனுள்ள விவசாயத்தில் ஈடுபட்டுள்ளனர் என்பதை ஏனோ கவனத்திற்குக் கொள்ளாதது கவலைக் கிடமானது.

விவசாயத்தில் ஈடுபட விரும்புகின்றோம். பணவசதியில்லை — பொருளாதார நெருக்கடி என்று, இன்று இளைஞர் சனைத்தால் — அரசு பலவித ஆறுதல் மொழிகளை அடுக்கடுக்காகத் தரும். ஆனால் அதனை நாடும் இடத்து அது பெரும்பாடாகவே கைக்கெட்டாத ஒன்றாகவேயிருக்கும். ஆனால் பணம் படைத்தவனுக்கு பலவிதத்திலும் வங்கிகள் மூலம் பல சலுகைகள் கிடைக்கும்.

போகட்டும் — தனது பணத்தை தானாக கடனாகவோ சொத்துக்களை விற்றோ தேடினால் உடனே அவனை சின்ன முதலாளியாகக்கருதி விடுகின்றது அரசாங்கம். வங்கியில் விவசாயக் கடன்களுக்கான திட்டங்கள் ஏராளமாகவுண்டு என்பது செய்தி. ஆனால் அதற்கு விண்ணப்பித்தால் சட்டங்கள் பல. அதாவது வங்கியின் தேவை ''விண்ணப்பதாரர்'' அசல் முதலாளியாக-பணம் படைத்தவனாக இருக்கவேண்டும்-அதாவது வாங்கிய பணத்தை திருப்பிக் கொடுக்க ஏற்கனவே வங்கியில் ''சக்தியிருக்க'' வேண்டும். உண்மை எங்குண்டு-யாருக்குத் தேவையுண்டு என்றெல்லாம் நூக்கிய நிபுணர்கள் அவதானிக்கத் தவறுவதுண்டு. ஆனால் பலர் விவசாயிகளுக்கு என்று வழங்கும் கடன்களை வசதியாகக் குறைந்த வட்டியில் பெற்று அதே பணத்தை உண்மையில் உழைக்கும் விவசாயிகளுக்கு கடும் வட்டியில் கொடுத்துப் பயிர் வளர்க்காது பணம் வளர்க்கும் உண்மை அறிஞர்களுக்கு உள்ளங்கை நெல்லிக்கனி.

சரி — எமக்கு கடனுதவி கைக்கெட்டாது, நிலமையறிந்து அனைத்துலக சமூக சீர்திருத்த ஸ்தாபனங்களின் உதவி கோரி வெற்றியீட்டினால், அது கைக்கெட்டி வாய்க்கு எட்டாத சூழ்நிலை என்று துயரங் கொள்ளும் இளைஞர் பலரை நாம் சந்தித்திருக்கின்றோம். இவ் இக்கட்டான நிலைமை பல ஆசிய நாடுகளில் காணப்பட்டு வந்தாலும் எமது நாட்டில் மிகவும் கேவலமாக கையாளப்படுகின்றது என துணிந்து நாம் கூறுவோம்.

ஆகவே, இத்தருணத்திலாவது அயராது உழைக்கும் இளைஞர் சமுதாயத்திற்கு உண்மையாகவே சமூகத்தினதும் நாட்டினதும் தேவைக்காக உழைக்கும் எம்மவர்க்கு அரசு அதிக கருணை காட்ட வேண்டியது அவசியம். அவர்கள் வெற்றி இன்றைய இளைஞருக்கு ஒரு திசை திருப்பியாகவிருக்கும் என்ற உண்மையை உணரவேண்டும் என்று நாம் கூற விரும்புகின்றோம். ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிற கிரகங்களிலுள்ள உயிரினங்களுடன் பேசலாம் !

பூமியைத் தவிர்ந்த நமது சூரியக் குடும்பத்தைச் சேர்ந்த ஏனைய கிரகங்களிலும், வேறு நட்சத்திரக் கூட்டங்களைச் சேர்ந்த கிரகங்களிலும் இருக்கக் கூடிய உயிரினங்களுடன் தொடர்பு கொள்ளும் சாத்தியக் கூறுகள் பற்றி ஆராயும் விஞ்ஞானிகள் மாநாடொன்று சில மாதங்களுக்கு முன்னர் சோவியத் யூனியனில் நிகழ்ந்தது.

நோபெல் பரிசு பெற்ற அமெரிக்க சோவியத் விஞ்ஞானிகளும், வானியல் வல்லுநர்களும் இந்த மாநாட்டில் கலந்து கொண்டார்கள்.

— அண்மைக் காலங்களில் கிடைத்த ரேடியோ சமிக்ஞைகளை அடிப்படையாகக் கொண்டு இதர கிரகங்களிலும் வாழக்கூடிய நாகரீக முதிர்ச்சி அடைந்த உயிரினங்களுடன் நாம் 'பேசுவது' பற்றி இங்கு ஆராயப்பட்டது. வெளிக் கிரகங்களிலுள்ள நாகரீக உலகிலிருந்து வரும் வானொலிச் சமிக்ஞைகளை விளங்குவதற்காகத் தாம் இரண்டு பரிசோதனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களை நடத்தியதாக ரஷ்ய விஞ்ஞானிகள் இங்கு தெரிவித்தனர்.

— இதைத் தொடர்ந்து, இந்த ஆராய்வில் ஈடுபட சர்வதேசரீதியான குழுவொன்று தெரிவு செய்யப்பட்டது. இருவகைகளில் இந்தக் குழு தனது ஆராய்ச்சியை நடத்த முடிவு செய்தது.

— சமீபத்தில் இருக்கும் தாரகைகளில் இருக்கக் கூடிய நாகரீக முதிர்ச்சியுற்ற உயிரினங்களை ஒரு வகையிலும்,

— மிகத் தொலைவிலுள்ள நட்சத்திரக் கூட்டங்களிலிருந்து வரும் சமிக்ஞைகளை இன்னொரு வகையிலும் ஆராய்வதெனவும் முடிவு செய்யப்பட்டது.

—இச் சமிக்ஞைகளை ஆராய்வது தொடர்பாக இரண்டு தீர்க்கமான எதிர்பார்த்தல்கள் கூறப்பட்டன. முதலாவது 1962-ம் ஆண்டுக்கான உடற்கூற்றியல் நோபெல் பரிசைப் பெற்ற DNA நியூகள் அமிலத்தின் (இதுதான் உயிரின் உற்பத்திக்கு மூலாதாரம் எனக் கருதப்படுகிறது) அமைப்பு.

இரசாயனப் பதார்த்தங்கள் நிரம்பப் பெற்ற பூமியைப் போன்ற எந்தக் கிரகத்திலும் இந்த இரசாயனப் பதார்த்தங்கள் தமக்குள் தற்செயலாகவோ, அன்றியோ ஒழுங்கு படுத்தப்படும் பட்சத்தில் உயிரினம் உண்டாகி, வேகமான கூர்ப்பு இயக்கமும் இடம் பெறுவது சாத்தியமாகாதே என்று டாக்டர் கிறிக் தெரிவித்தார்.

அடுத்ததாக — நாகரீகம் உண்டாகியிருக்கும் பட்சத்தில் அதற்கு ஆணிவேரான மொழியும் அங்கு உருவாகியிருக்கும் எனவும், அத்தகைய கிரகங்களில் நகரங்கள் தோன்றியிருக்கலாம் என்று கருத்துத் தெரிவித்தார் டாக்டர் கென்த் பிளன்னர்.

இருந்தபோதிலும் பிற கிரகங்களிலுள்ள அதீத நாகரீகமடைந்த மக்கள் எத்தகைய செய்தி பரிவர்த்தனை முறையைக் கையாளுவார்கள் என்பது ஓரளவு வளர்ச்சியுற்ற நமது விஞ்ஞானிகளுக்குப் புதிராகவே இருக்கிறது.

குறிப்பிட்ட கிரகங்களின் ஈர்ப்பு எல்லைக்குள் நாம் ஐதரசன் குண்டுகளை வெடித்தலின் மூலம் நேரடியான வானொலி அலைத் தணிக்கைகளை அக்கிரகவாசிகளுக்கு அனுப்பலாம் என்பது சில விஞ்ஞானிகளின் கருத்து.

— அடுத்தவழி, லேஸர் முறைகளினால் செறிவாக்கப்பட்ட சமிக்ஞை அலைகளை அக்கிரகங்களுக்கு அனுப்பித் தொடர்பு கொள்ள முயற்சித்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலிபோர்ணியா சர்வகலா சாலையைச் சேர்ந்த டாக்டர் சாள்ஸ் டௌன்ஸ் — 1964-ம் ஆண்டு இவருக்கு, லேஸர் — மேஸர் தத்துவங்களைக் கண்டு பிடித்தமைக்காக நோபெல் பரிசு கிடைத்தது — தானியங்கிக் கலங்களைப் பிற நட்சத்திரங்களுக்கு அனுப்புவது தொடர்பு கொள்ளுவதற்குப் போதுமான ஒரு வழியல்ல என்று கருத்துத் தெரிவித்தார்.

இருந்தபோதிலும், ஒளி அல்லது வானொலி அலைகள் மூலம் சமிக்ஞைகளை அனுப்புவதே பெரிதும் பொருளாதார ரீதியில் சுமுகமான வழி என்று இம் மாநாட்டில் ஒத்துக் கொள்ளப்பட்டது.

— இவற்றுள் எந்தவழி பிற கிரகங்களுடன் பேச நமது விஞ்ஞானிகளுக்கு உதவும் என்பதைக் காலம்தான் பதில் சொல்ல முடியும். ★

## வாழ்ந்தாலும் ஏசும் தாழ்ந்தாலும் ஏசும் உலகமே இதுதான் !

நாம் ஒரு விஷயத்தைச் செய்யத் தொடங்கும் முன் "இதைச் செய்தால் நம்மைப் பற்றி உலகம் என்ன சொல்லுமோ?" என்று சிந்திக்கின்ருேம். இப்போது பாருங்கள், உலகம் என்ன சொல்லுகிறதென்று:

"உழைக்காமல் சும்மா இருந்தால் சோம்பேறி என்று பழிக்கும். கொஞ்சம் அதிகமாக உழைத்தால் பேராசைக்காரன் என்று இழித்துரைக்கும். பணத்தைச் சேர்த்து வைத்தால் கஞ்சன் என்றும். செலவழித்தால் ஊதாரி என்றும் கூறும். பணம் சம்பாதிக்கத் தெரியாவிட்டால் அவனுக்குரிய பட்டம் பைத்தியக்காரன். ஆனல், நாலு வழியிலும் உழைப்பவனுக்கு அயோக்கியன் என்ற பட்டம். பணத்தை வைத்திருந்தால் பூதம் காக்கின்ருன் என்றும். கொடுத்தால் பிழைக்கத் தெரியாதவன் என்றும் ஏளனம் செய்யும்.

வாழ்ந்தாலும் ஏசும், தாழ்ந்தாலும் ஏசும், உலகமே இதுதான் ! என்னே உலகம் !!

— எம். ஐ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழகுக்கும் ஆகாரத்திற்கும் சூரியகாந்தி

"தாரணி"

இன்று உலகில் 9.2 மில்லியன் ஹெக்டர்ஸ் நிலத்தில் சூரியகாந்தி பயிரிடப் படுகின்றது. இதில் சோவியத் ரஷியா, ஐக்கிய நாடுகள் சுமார் 52% உற்பத்தியையும் உலகின் மற்றைய பகுதிகள் மிகுதி 48% உற்பத்தியையும் செய்து வருகின்றன. இன்றைய உலகில் உயர்ந்து வரும் தாவர எண்ணெய் உபயோகத்தின் விளைவே இது எனலாம். எமது நாடுகளில், தோட்டத்தில் பூஞ் செடியாக அழகு பண்ண, நாட்டப்படும் அதே சூரியகாந்தி, நற்சத்துள்ள உணவுப் பொருளாக கொள்ளப் படுகின்றதென அறிய மிகவும் ஆச்சரியமாக இருக்கலாம். ஆனால் இது உண்மை!

நிலக்கடலை எண்ணெய், நல்லெண்ணெய், போன்ற மற்றை எண்ணெய்களின் உற்பத்தியிலும் பார்க்க மிகவும் குறைந்த செலவில் இவ்வெண்ணெய் பெறப்படுவதால், இன்று இதன் தேவை பரவலாகிக் கொண்டிருக்கின்றது. அத்தோடு சூரியகாந்தி உற்பத்தி வரட்சியையும் மிகவும் தாங்கக்கூடிய ஒரு தாவரம் ஆதலால் (Drought Resistant) பொதுவாக எந்தப் பிரதேசத்திலும் உண்டுபண்ண முடியும். எனவே உலகின் பல பாகங்களில் சூரியகாந்தி தோட்டங்கள் பெருகி வருவதில் ஆச்சரியமில்லை.

இச் சூரியகாந்தியின் பெருக்கத்தைப் பற்றியும் அதன் பயனைப் பற்றியும் ஆராய சமீபத்தில் பிரான்ஸ் தேசத்தில் கிளெர்மொண்ட் — பெரான்ட் (Clermont — Perrand) என்ற இடத்தில் அகிலத்துலக மகாநாடு ஒன்று கூட்டப் பெற்றது என்றால் இதனின் மகத்துவத்தை நான் கூறவேண்டியதில்லை.

இச் சூரியகாந்திச் செய்கையில், பொதுவாக நைட்ரஜன் மிக முக்கிய கனிப் பொருளாக கொள்ளப் படுகின்றது. ஆனால் சூரியகாந்தி இவைகளை நாம் தராதபோதும், நல்ல வளர்ச்சியைத் தருவதற்குக் காரணம் அதன் பிரத்தியேக வலுவேயாகும். அதாவது தனக்குத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவையான அனைத்தையும், மிகவும் ''சாதுரியமாக'' நிலத்திலிருந்து உறிஞ்சி, தனது தண்டில் சேமித்துவைக்கும் சக்தி இத் தாவரத்திற்குண்டென்று சொல்லப்படுகின்றது. பொதுவாக் 1 தொன் சூரியகாந்தி விதைகளைப் பெற 110 இருத்தல் நைட்ரேட், தாவரத்தால் உறிஞ்சப்படுகின்றதென விஞ்ஞனிகள் கண்டு பிடித்துள்ளனர்.

சாதாரன வரண்ட பிரதேசங்களில் 1 ஹெக்டரில் 45.000 செடிகளையும் நீர்பாய்ச்சக் கூடிய நிலங்களில் 1 ஹெக்டரில் 60,000 செடிகளையும் நாட்டலாம். இத்தாலி தேசத்தில் சுமார் 80,000 செடிச் செய்கையும் திறமையாகக் கையாளப்பட்டுள்ளது. சூரியகாந்தி விதையுற்பத்தியில், பயிர் நெருக்கடி அதிக பாதக விளைவைத் தருவதில்லையாம். ஆனால் வரண்ட நிலங்களில் செய்கை பண்ணப்படும் விதைகள் பொதுவாக, மற்றைய குளிர் பிரதேசங்களில் சாகுபடி செய்யும் விதையிலும் 5% குறைந்த எண்ணெயைத்தான் தருகின்றது

இலங்கையில் இச்செய்கையின் அத்தியாவசியம் இதுவரையில்லாத போதிலும், இன்றைய பொருளாதாரத்திற்கு உதவ, நெருக்கடியும் தேவையும் வருமுன், நாமும் வெள்ளம் வருமுன் அணை போடுவது நல்லதென்பது என் எண்ணம்.

[விரிவான விளக்கம் அல்லது மேலும் தொடர்புகளுக்கு ஆசிரியருக்கு எழுதவும்]

★

# மெழுகு உண்டாவது எப்படி?

பொதிகள் முத்திரையிடுவதற்கு நாம் உபயோகிக்கும் தேன் மெழுகு எனப்படும் அரக்கு ஒருவித பூச்சிகளால்தான் உருவாக்கப்படுகின்றது என்பது பலருக்குப் புதுமையான செய்தியாக இருக்கும் அரக்குப் பூச்சி என்று சொல்லப்படும் அத்தகைய பூச்சிகள் கூடுகட்டுவதற்காகத் தயார் செய்யும் ஒருவித பிசின் தான் இந்த அரக்கு.

இந்தப் பூச்சிகள் பலாசம், இலந்தை, குசுமம், காசுகட்டி, கருவேலமரம், அத்தி முதலிய மரங்களின் பாலைக் குடித்து சீவிக்கின்றன. சுமார் L 50,000 பூச்சிகள் சேர்ந்து உருவாக்கும் மெழுகு ஒரு இருத்தலாகும்.

(வ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்பனைச் சித்திரம்

# உரிமைக் குரல்

அது ஒரு பெரிய கல்லூரி. அதன் பெரிய கட்டிடங்களில் ஒன்ருக அமைந்திருந்த அந்த இரசாயன ஆய்வு கூடம் அமைதியில் ஆழ்ந்திருந்தது.

சிறிய 'செல்பு' களில் அமிலங்கள், காரங்கள் போன்ற பலவகையான இரசாயனப் பொருட்கள் அழகாக அடுக்கப்பட்டிருந்தன. ஒரு புறத்தில், மற்ருெரு புறத்தில் தாங்கிகள், சுடரடுப்புகள், தராசுகள், முக்காலிகள் போன்ற உபகரணங்கள் வரிசையாக வைக்கப்பட்டிருந்தன. வேருெரு பக்கத்தில் ஆசிரியரின் மேசை கதிரைகள் இருந்தன. அதனருகிலே, சுவரில் தொழிற்பாட்டுத் தொடர் ஆவர்த்தன அட்டவணை போன்றவை தொங்கவிடப்பட்டிருந்தன.

இருந்தாற்போல் ஒரு சலசலப்பு! சுவரில் தொங்கிக் கொண்டிருந்த தொழிற் பாட்டுத் தொடர் எழுதப்பட்ட கடதாசி படபடத்தது. அதில்

" வஞ்சி "

மேலிருந்து கீழாக வரிசைப் படுத்தி எழுதப் பட்டிருந்த மூலகங்கள் ஒன்ருேடு ஒன்று மோதுப்பட்டுக் கூச்சலிட்டன.

தொடரில் ஐதரசனுக்குக் கீழே எழுதப்பட்டிருந்த செம்பு ஆக்ரோஷத்துடன் கத்தியது. ''மனிதர்களில் தான் உயர்வு தாழ்வென்ருல் நம்மிலும் ஏன் இந்த வேறுபாடு? நானும் சற்று மேலே இருந்தாலென்ன?'

அதற்கருகே கிடந்த வெள்ளியும் தங்கமும் இதனை ஆமோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நித்தன. ஐதரசனுக்கு மேலே வேறும் சில மூலகங்களுக்கப் பால் இருந்த - உயர்ந்த ஸ்தானத்திலிருந்த - இரும்பிற்கு இது பொறுக்கவில்லை.

''டேய்! நீ என்னடா எங்களைப் பற்றிப் பேசுவது? நாம் அந்தஸ்தினுல் உயர்ந்தவர்கள். மேலே இருக்கின்ரேம். நீ தாழ்ந்தவன். கீழே

**தொழிற் பாட்டுத் தொடர்**

K
Ba
Ca
Na
Mg
Al
Zn
Fe
Pb
H
Cu
Ag
Hg
Au

இருப்பது தான் இயல்பு!'' என்று இரும்பு உறுமியது. மகனீசியமும் நாகமும் அதற்கு ஒத்துப்பாடின.

நடுநிலை வாதியான ஐதரசன் ஒன்றும் பேசாமல் அமைதியாக இருந்தது.

பேச்சுவார்த்தை தடித்துக் கைகலப்பு ஆரம்பமானது: கீழேயிருந்து செம்பு, வெள்ளி, தங்கம் என்பன மேலே வர முயற்சித்தன. மேலே இருந்து இரும்பு, மகனீசியம், நாகம் என்பன இவற்றை முட்டிமோதிக் கீழே தள்ளின.

இறுதியாக எப்படியோ இவை தள்ளுப்பட்டு இரும்பினுடைய இடத்தில் செப்பும் செம்பின் இடத்தில் இரும்புமாக இடமாற்றம் பெற்று விட்டன. அப்பொழுது ஒன்பதாம் வகுப்பு மாணவர்களுடன் ஓர் ஆசிரியர் அங்கு வரவே அவை அப்படியே அமைதியாக இருந்தன.

இப்போது புதிய தொழிற் பாட்டுத் தொடர் தொங்கிக் கொண்டிருந்தது. ஐதரசனுக்கு கீழே இருந்த செம்பு மேலேயும் மேலே இருந்த இரும்பு கீழேயும் இடமாற்றப் பட்ட தொடர் அது.

ஆசிரியர் அதனைக் கவனிக்கவில்லை; தான் முன்பு படித்த நினைவின்படி மாணவர்களுக்குச் சொன்னார்.

மாணவர்களே! தொழிற் பாட்டுத் தொடரில் ஐதரசனுக்கு மேலே உள்ள மூலகங்கள் யாவும் அமிலத்திலிருந்து ஐதரசனை வெளியேற்றும்; ஐதரசனுக்குக் கீழேயுள்ள மூலகங்கள் ஐதரசனை வெளியேற்ருது. இப்போது நாம் ஐதரசனுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலே உள்ள மூலகமான இரும்பை அமிலத்தோடு சேர்த்து ஐதரசனைப் பெறுவோம்.

இவ்வாறு கூறிவிட்டுச் சோதனைக் குழாயினுள் அமிலத்தை எடுத்து அதனோடு இரும்புத் தூளைச் சேர்த்தார். தாக்கமெதுவும் நடைபெறவில்லை. அவர் திகைத்தார்.

உண்மையில் இரும்பு அமிலத்துடன் சேர்ந்து ஐதரசனை உண்டாக்க வேண்டும். ஆனால் இப்போது இரும்பின் இடம் மாற்றப் பட்டு விட்டதால் அது ஐதரசனை வெளியேற்றவில்லை.

ஆசிரியர் சிந்தனையோடு அதனை வைத்துவிட்டு இன்னொரு சோதனைக் குழாயில் அமிலத்தை எடுத்தார். "பிள்ளைகளே! தொடரில் ஐதரசனுக்குக் கீழே உள்ள செம்பு அமிலத்தோடு சேரும் போது ஐதரசனை வெளியேற்றுது" என்று கூறிக்கொண்டு செம்புத் துருவல்களை அதனுடன் சேர்த்தார்; உடனே தாக்கம் நிகழ்ந்தது: ஐதரசன் வெளி வந்தது. ஆசிரியர் அதிசயித்தார். மாணவர்களுக்கு எல்லாம் புதிராக இருந்தன.

இவையெல்லா வற்றையும் பார்த்துக் கொண்டிருந்துவிட்டு செம்பு "நாங்கள் யாவரும் மூலகங்கள். நமக்குள் உயர்வு தாழ்வில்லை. இதை உணராமல் நாமும் மனிதர்கள் போல நடந்து கொண்டதால் தான் இந்த வினை" என்று தனக்குள் சொல்லிக் கொண்டு மெதுவாகத் தனது இடத்தை நாடியது. இரும்பு தனது சொந்த இடத்தை அடைந்தது. இப்போது தொழிற்பாட்டுத் தொடர் மீண்டும் சரியான நிலையை அடைந்தது.

"மாணவர்களே! நாம் இரண்டு பரிசோதனைகளையும் மீண்டும் செய்வோம்" என்று கூறிய ஆசிரியர் மறுபடியும் அச் சோதனைகளைச் செய்து காட்டிய போது அவை சரியாக நடைபெற்றன. அவர்கள் மகிழ்வோடு வகுப்பறையை நோக்கி நடந்தனர். இன்று வரை அவர்களில் யாருக்கும் அன்று நடந்த 'அந்த' விஷயம் தெரியாது. ★

## சந்திப்பு

பொறுமைக்கார இரு நடிகைகள் சந்தித்துக் கொண்டார்கள்.

ஒருத்தி "வணக்கம் அக்கா" என்றாள்; "வணக்கம் அம்மா" என்றாள் மற்றவள்.

(இ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# பாதிநிலா

பி. பத்மநாதன்

(சென்ற இதழின் தொடர்ச்சி)

## 4

சங்கரின் ஈமைக்கிரியைகள் நடந்தேறின. மத்தியான உணவிற்குப்பின் பொலீஸ் நிலையத்தில் இன்ஸ்பெக்டரும், ரகுவும் வக்கீலுக்காகக் காத்திருந்தனர். அவரும் வந்து சேர்ந்தார். உயிலை இன்ஸ்பெக்டரிடம் கொடுத்து விட்டு.

''இன்ஸ்பெக்டர், சங்கர் உயிருடன் இருக்கும்போதே அவர் சொத்தில் பாதியை குணசீலனுக்கு எழுதி வைத்து விட்டார். ஆனால் பாகத்தைப் பிரிக்க வில்லை. சங்கரின் உரிமையான மற்றைய பாதி, அவருக்குப் பின் மனைவிக்குச் சொந்தம். மனைவி இல்லாவிடில் பிள்ளைகளுக்குச் சரிசமமாகப் பிரிக்க வேண்டும். மனைவியும் பிள்ளைகளும் இல்லையேல், அச் சொத்து முழுதும் குணசீலனுக்கே உரித்தாகும்'' என்று கூறினார். இன்ஸ்பெக்டர் உயிலைப் பிரித்துப்பார்த்து விட்டு, அதை ஆமோதித்தார். வக்கீல் விடைபெற்றார்.

## 5

வக்கீல் சென்ற பத்து நிமிடங்களில் எல்லாம் குணசீலன் அங்கு வந்து விட்டான்.

இன்ஸ்பெக்டர் குறுக்கு விசாரணை செய்யக் குணசீலன் கூறினான். ''எனக்கும் என் அண்ணனுக்கும் ஒருவித தகராறுமேயில்லை. வியாபாரத்திலும் சரி வாழ்க்கையிலும் சரி இது உங்களுக்கே தெரியும்'.

இன்ஸ்பெக்டர் தலையசைத்து ஆமோதித்தார்.

குணசீலன் தொடர்ந்தான்: ''அன்று எட்டுமணிக்கெல்லாம் உணவருந்தி விட்டேன். பிறகு என் அறையிலமர்ந்து வழக்கம் போல் அன்றைய வியாபாரக் கணக்குகளைப் பார்த்துக்கொண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டிருந்தேன். வழக்கமாக சாப்பிட்ட தட்டு, கிளாஸ் போன்றவற்றை வேலைக்காரக்கந்தையாதான் எடுத்துப் போய்க் கழுவுவான். அன்று அவன்தான் எடுத்துப் போயிருக்க வேண்டும் அதை நான் பார்க்கவில்லை. சிறிது நேரம் கழித்து அண்ணன் சாப்பிட்டார். சாப்பாட்டு மேசையிலிருந்தபடியே 'குணு, நாளை நான் கூறியபடி இருவரும் பருத்தித்துறைக்கு செல்ல வேண்டும். காரைத் தயார் செய்துவை' என்று பலத்த குரலில் கூற, அதற்கு நானும் 'சரி' என்று உள்ளிருந்தபடியே கூறுனேன். அப்போது ஒன்பது மணியிருக்கும் அண்ணன் உணவருந்திய பிறகும், கந்தையாதான் சுத்தம் செய்திருக்க வேண்டும். பின், நான் தூங்கிவிட்டேன்''

குணசிலன் காலையில் நடந்ததை மீண்டும் விவரித்தான், இதைக் கூறுவதற்குள் குணசிலனின் கண்கள் கலங்கிவிட்டன. பின், விடை பெற்றுச் சென்றுன்.

இன்ஸ்பெக்டர் காவலில் வைத்திருந்த கந்தையாவை வரவழைத்து, அதட்டி பொலீஸ் முறையில் விசாரித்தார்;

''ஐயோ சாமி, எனக்கு ஒன்றுமே தெரியாது. சின்ன ஐயா சாப்பிட்டதும் தட்டு, கிளாஸ் முதலியவற்றை எடுத்துப்போய்க் கழுவினேன். பின், பெரிய ஐயா சாப்பிட்ட பிறகு மேசையைத் துப்புரவாக்கி, நாங்கள் எல்லோரும் உணவருந்தி விட்டுத் தூங்கிவிட்டோம். காலையில் செய்தி கேட்டு பதறினோம். பெரிய ஐயாவையும் சின்ன ஐயாவையும் போல் எசமானர்கள் இந்தக் காலத்தில் கிடைப்பது அரிதுங்க'' என்று கந்தையா கூறி முடித்தான்.

இன்ஸ்பெக்டர் அவனை மீண்டும் காவலில் வைக்கும்படி அனுப்பிவிட்டு, ரகுவிடம் திரும்பி, ஆறுதலாக வேலைக்காரர் ஒவ்வொருவரையும் திர விசாரிக்க வேண்டும். அதுசரி, நீ எப்போ கொழும்புக்குப் புறப்படுகிறுய்?'' என்று கேட்டார்.

' இன்று பகலையே புறப்பட உத்தேசம். லீவு எடுக்க வில்லை. ஏதேனும் துப்புக் கிடைத்தால், எனக்கு தெரிவியுங்கள்'' என்று கூறி ரகு விடை பெற்றுன்.

## 6

''ரேணு, இன்று மாலை தபால் வண்டியில் புறப்படுவோம் என்று நினைக்கிறேன்'' ரகுவின் குரலும் உடலும் காலை முதல் ஒரே அலைச்சலினுல் களைப்புற்றிருந்தன;

''ஏங்க ஒன்று சொன்னுல் கோபிக்க மாட்டீங்களே''

''சொல்லு, ரேணு, நீ கூறுவதற்கு மறுப்பேது!''

'' அம்மாவும் அப்பாவும் எங்களை இன்னும் சில நாட்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கிப் போகும்படி கேட்கிறார்கள்''

'நன்றாகச் சொன்னாய். போ. நான் லீவே எடுக்கவில்லையே. அலுவலகத்திலும் இப்போது வேலை அதிகம் என்று உனக்குத் தெரியுமே''

''அது சரிங்க. ஏதோ கேட்கிறார்கள் என்று சொன்னேன். இஷ்டமில்லை என்றால் இன்றே புறப்படுவோம்''

ரகுவின் நிலைமை தர்மசங்கடமாகி விட்டது.

''நான் ஒன்று சொல்கிறேன், கேட்கிறாயா?''

நீங்க சொல்லி நான் கேட்காதது உண்டா?''

''ஏன் ரேணு, நான் மட்டும் தனியாக இன்று கொழும்புக்கு போகிறேன். இந்த வார முடிவில், ஒரு வார லீவு எடுத்துக் கொண்டு திரும்புகிறேன். லீவு முடிந்ததும், இருவரும் போகலாம். ஒருவார லீவில் வருவதற்கு இன்னுமொரு காரணமிருக்கிறது''

அது என்னங்க?''

''சங்கரின் உற்ற நண்பனான நான், அவனை இக்கதிக்கு ஆளாக்கியது யார் என்று கண்டுபிடிக்க வேண்டும். நானும் இன்ஸ்பெக்டருக்கு உதவி செய்யப் போகிறேன்'

''அடேயப்பா, அப்பறியும் சிங்கம். நீங்கள் தீர்மானித்தால் அதற்கு மறுப்பேது? சரிங்க நான் இங்கேயே தங்குகிறேன். நீங்க போய் சீக்கிரமே வாங்க. கட்டாயம் கடிதம் போடுங்க. உடம்பைப் பத்திரமாய்ப் பார்த்துக் கொள்ளுங்க''

ரகு அன்றைய இரவு தபால் வண்டியில் கொழும்புக்குத் தனியாகக் கிளம்பினான்.

## 7

அலுவலகத்தில் ரகுவுக்கு வேலையே ஓடவில்லை. மனைவியின் பிரிவுடன், சங்கரின் கொலையும் சேர்ந்து மனத்தை என்னவோ செய்தது. மேலதிகாரியிடம் அடுத்த நோன்மதி கழிந்த முதல் நாளிலிருந்து ஒரு வார லீவுக்கு விண்ணப்பம் செய்து வைத்தான். ஒவ்வொரு நாள் போவது ஒவ்வொரு யுகமாகத் தோன்றியது.

ரகு கொழும்புக்குத் திரும்பி நான்காம் நாள் மத்தியான உணவை முடித்துக் கொண்டு மீண்டும் வேலையிலமர்ந்தபோது தொலைபேசிப் பணிப்பெண் வாழ்நகரிலிருந்து ரகுவுக்குத் தொலைபேசி வந்திருப்பதாக அறிவித்தாள். தொலைபேசியில் பேசுவது நிச்சயமாக ரேணுகாவாகத்தான் இருக்கும் என எண்ணியவாறே தொலைபேசியை அடைந்து கையிலெடுத்தான்.

என்ன ஏமாற்றம் ரகுவின் நண்பர் போலீஸ் இன்ஸ்பெக்டர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான் பேசினார்:

''ஹலோ, ரகுவா?... ரகு, உனக்கு முக்கிய செய்தி ஒன்று. அடுத்த ரயிலில் உடனே புறப்பட்டுவா''

''ஏன் இன்ஸ்பெக்டர், என்ன விஷயம்?''

ரகுவுக்கு ஒன்றும் புரியவில்லை

''உடனே புறப்பட்டு வா. நண்பன் என்ற முறையிலும் போலீஸ் இன்ஸ்பெக்டர் என்ற முறையிலும் சொல்கிறேன்''

'' சரி, இன்ஸ்பெக்டர் உடனே புறப்படுகிறேன். விஷயத்தைச் சொல்லுங்கள், ஆவலாக இருக்கிறது''

''சங்கரைக் கொலை செய்த குற்றவாளியையும், குற்றத்தைப் புரியத்தூண்டியவரையும் கண்டு பிடித்து விட்டோம்''

''எனது வாழ்த்துக்கள், இன்ஸ்பெக்டர். நீங்கள் தான் பொலீஸ் புலியாயிற்றே. ஆனால் அவ்வளவு சீக்கிரத்தில் கண்டு பிடித்து விடுவீர்களென நினைக்கவே இல்லை. யார் அந்தக் கொலையாளி''

''எல்லாம் விபரமாக நீ வந்த பின் சொல்கிறேன்''

''இல்லை இப்போதே கூறி விடுங்கள். எனக்கு இருப்புக் கொள்ளவில்லை''

''சரி, வேலைக்காரன் கந்தையாதான் உணவில் ஆர்சனிக் நஞ்சைக் கலந்து விட்டிருக்கிறான் குணசீலன் உணவருந்திய பின் சங்கர் விரும்பி உண்ணும் உருளைக் கிழங்குக் குழம்பில் கலந்து இருக்கிறான். அன்று சமையல் காரன் குணசீலனுக்கும் சங்கருக்கும் மட்டும் அளவாக அக்குழம்பைத் தயாரித்திருக்கிறான். ஏனையோர் அதை உண்ணவில்லை''

''அடமோசக்காரப் பயலே ஆமாம், யார் கொலை செய்யும்படி கந்தையாவைத் தூண்டியது?''

''கொலை செய்யத் தூண்டியவர் இப்போது இந்த உலகத்திலேயே இல்லை. காலமாகி விட்டார்''

''என்ன இன்ஸ்பெக்டர், ஒரே மர்மமாக இருக்கிறது. யார் அது?''

''முதலில் உன் மனதை திடப்படுத்திக்கொள்''

''ஏன் இன்ஸ்பெக்டர்?''

தொலைபேசியில் இன்ஸ்பெக்டரின் குரல் கடுமையாக மாறியது.

''உன் மனைவி ரேணுகா தான் கந்தையாவிடம் சங்கரைக் கொலை செய்யும்படி தூண்டியிருக்கிறாள். அவள் நேற்று இரவுதான் தற்கொலை செய்து கொண்டாள்''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மயங்கிய நிலையில் சரியப் போன ரகுவை அப்படியே தாங்கிப் பிடித்துக் கொண்டான், பக்கத்து மேசையின் அருகில் அமர்ந்திருந்த அலுவலக நண்பன் சம்பத்.

ரகுவின் வருகையை எதிர் பார்த்தவண்ணம் மாமனார், இன்ஸ்பெக்டர் எல்லோரும் வாசலிலேயே நின்றிருந்தனர். ரேணுகாவின் தாயாரின் அழுகுரல் வீதி வரைக்கும் ஒலித்தது.

உள்ளே சென்ற ரகுவுக்கு ரேணுகாவின் சடலம் தென்பட்டது. பரிசோதனை முடிந்து விட்டிருந்தபடியால் முகத்தைத் தவிர மீதிப் பாகத்தை மூடியிருந்தனர். நெற்றியில் குங்குமம் பளிச்சிட்டது. ரகு 'ஓ' வென்று கதறி அழுதான். அழுவதனால் அவன் கவலை தீருமென யாரும் சமாதானப் படுத்த முன்வரவில்லை.

அரை மணிநேரம் சென்றது. இன்ஸ்பெக்டர் ரகுவை மெல்லத் தனியாக அழைத்துச் சென்றார். ரேணுகாவின் ஈமைக் கிரியைகள் சீக்கிரமே நடந்து முடிந்தன. ★

## 8

காலையில் யாழ் நகரை அடையும் தபால் வண்டி சரியான நேரத்துக்கு வந்து விட்டது காரொன்றை வாடகைக்கு அமர்த்திக் கொண்டு ரகுவும், சம்பத்தும் ரேணுகாவின் வீட்டிற்கு விரைந்தனர். ரகுவை பிரமை பிடித்த நிலையில் தனியாக அனுப்ப விரும்பாத அலுவலக மேல்அதிகாரி சம்பத்தையும் துணையாக அனுப்பி வைத்திருந்தார். அலுவலகத்திற்கு ரகுவின் மாமனாரும் ஓர் அவசர தந்தி கொடுத்திருந்தார்.

### கடலில் 28 மயில்கள்!

வகுப்பில் புவியியல் பாடம் நடந்து கொண்டிருந்தது. ஆசிரியர் இலங்கையைப் பற்றிப் படிப்பித்துக் கொண்டிருந்தார்.

''நம் நாடாகிய இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையே கடல் வழியே இருபத்தியெட்டு மைல் உள்ளது''.

ஒரு மாணவனுக்குச் சந்தேகம் எழுந்து விட்டது ''கடலில் இருபத்தியெட்டு மயில்களும் எப்படி உயிருடன் இருக்கும் சேர்?''

எம். ஐ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Appropriate Technology Services
121, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA
No.

# எமது நாடும்

## நிலையற்ற உலகச் சந்தை விலைகளும்

எம். எல். எம். இக்பால் பீ. ஏ.

நாம் பத்திரிகைகளைப் பார்த்தால் அடிக்கடி நிதி அமைச்சர் கலாநிதி என். எம். பெரேரா அவர்கள் உலகச் சந்தையில் அரிசி, மா, சீனி என்பவற்றின் விலைகள் அதிகரித்துக் கொண்டிருப்பதாகவும், இலங்கை பெரும் அந்நியச் செலவாணி நெருக்கடிக்குட்பட்டிருப்பதாகவும் கூறுவதைக் காண்கிறோம். நாமும் அதனை வசித்துக் கொண்டுதான் இருக்கின்றோம். ஆனால் அவற்றுக்கான காரணங்களைப் பற்றி சற்றுச் சிந்திக்கின்றோமா என்று கேட்டால் இல்லை என்றுதான் கூற வேண்டும்,

பண்டைய கிழை உலகின் தானியக் களஞ்சியமாக விளங்கிய இலங்கை, இன்று தன் உணவின் சுய தேவைப் பூர்த்திக்காக பிற நாடுகளை எதிர் பார்த்துக்கொண்டிருக்க வேண்டிய துரதிருஷ்ட நிலையில் இருக்கின்றது. இலங்கையினை ஆட்சி செய்த ஆங்கிலேயர்கள் தமக்குச் சாதகமாக எடுத்த பொருளாதார நடவடிக்கைகளே எமது நாடு இன்னும் பொருளாதாரத்தில் அடிமை நிலையிலேயே இருப்பதற்குக் காரணமாகும். அவர்கள் எடுத்த நடவடிக்கைகளின் விளைவு உணவுப் பயிர்ச் செய்கை வீழ்ச்சியடைந்து பெருந்தோட்ட அடிப்படையிலான வர்த்தகப் பயிர்ச் செய்கை மேன்மையுற்றது. அக்கால முதல் எம் நாடு தனக்குத் தேவையான உணவுப் பொருள்களுக்காக பிற நாடுகளையே எதிர்பார்த்த வண்ணமிருக்கின்றது.

இலங்கை தன் வருவாய்க்கு வர்த்தகப் பயிர்ச் செய்கைப் பொருட்களின் ஏற்றுமதியிலும், தேவையான பொருட்களுக்கு இறக்குமதியிலும் தங்கியிருக்க வேண்டியிருக்கின்றது. இலங்கையின் பொருளாதாரம் ஏற்றுமதி இறக்குமதிகளின் அடிப்படையில் கட்டியமைக்கப் பட்டமையே எமது பொருளாதாரப் பிரச்சனைகளுக்கான அடிப்படைக் காரணமாகும். எமது முக்கிய ஏற்றுமதிப் பொருட்களான தேயிலை, றப்பர், தெங்குப் பொருட்கள் என்பன ஏனைய நாடுகளின் இதே உற்பத்திகளுடனும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விசேடமாக தேயிலை இந்தியா, புதிதாக சுதந்திரம் பெற்ற ஆபிரிக்க நாடுகள் போன்றவற்றின் உற்பத்தியுடனும் உலகச் சந்தையில் போட்டியிட்டுக் கொண்டிருக்கின்றமையாலும், எமது இயற்கைப் பொருட்கள் அதே செயற்கைப் பொருட்களுடன் போட்டியிட வேண்டியிருப்பதாலும் கடந்த சில ஆண்டுகளாக எமது ஏற்றுமதிப் பொருட்கள் தொடரான விலை வீழ்ச்சியினை அனுபவித்துக் கொண்டிருக்கின்றன. உலகச் சந்தையில் எமது ஏற்றுமதிப் பொருட்கள் மிகச் சிறிய பங்கினையே வகிப்பதால் விலை வீழ்ச்சியினை எமது நாட்டினால் கட்டுப்படுத்தவும் முடியாது. இந்நிலைமையில் ஏற்றுமதிப் பொருட்களினால் எமக்குக் கிடைக்கும் அந்நியச் செலாவணி வருவாயும் தொடராக வீழ்ச்சியுற்றுக் கொண்டேயிருக்கின்றது.

கடந்த ஒரு வருட காலத்தில் உலகத் தேயிலை உற்பத்தி சுமார் $12\frac{1}{2}$ கோடி றாத்தலாக அதிகரித்திருக்கும்; அதேவேளையில் இலங்கையின் தேயிலை உற்பத்தி ஒரு கோடி றாத்தலால் குறைந்துள்ளதும் கவனத்திற்கு எடுக்கக் கூடியது. எம் தேயிலையை இறக்குமதி செய்யும் நாடான பிரிட்டன் அண்மையில் எம்மிடம் வாங்கும் தேயிலையின் அளவைக் குறைத்து கிழக்காபிரிக்காவிலிருந்து பெருந்தொகையான தேயிலையை வாங்கியிருக்கிறது. றப்பரைப் பொறுத்து சென்ற வருடவருவாயில் 4 கோடி ரூபாய் குறைந்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

தெங்குப் பொருட்களை எடுத்துக் கொண்டால் உள்ளூரின் கடும் வரட்சியினாலும், தென்னை நோயினாலும் ஒரு தற்காலிக விலையேற்றம் காணப்பட்ட போதிலும், சோயா அவரை தாவரநெய் என்பனவற்றின் போட்டியால் உலகச் சந்தையில் இதன் விலை இறக்கத்திலேயே காணப்படுகின்றது. அடுத்த 10 வருட காலத்தில் இலங்கை தேங்காயை இறக்குமதி செய்ய வேண்டிய ஒரு நிலை ஏற்பட்டாலும் ஆச்சரியமில்லை என தென்னை ஆராய்ச்சி நிலையம் எச்சரித்திருப்பதையும் குறிப்பிடாமல் இருக்க முடியாது.

எமது ஏற்றுமதிப் பொருட்களுக்கு ஏற்படும் விலை வீழ்ச்சியினால் உற்பத்திச் செலவு சிறிதும் குறையமாட்டாதாகையால், அவற்றினை உற்பத்தி செய்வோர் உற்பத்திச் செலவைக் குறைப்பதற்காக தொழிலாளரின் தொகையை குறைத்துக் கொள்வர். இந்நிலைமையில் இலங்கையின் வேலையில்லாத் திண்டாட்டம் வேலையிழந்த தோட்டத் தொழிலாளரினால் மேலும் அதிகரித்து நாடு மோசமான நெருக்கடிக்குட்பட்டுவிடும், எனவே எமது ஏற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றுமதிப் பொருட்களின் விலையில் ஏற்படும் விலை இறக்கமனது. உள்நாட்டில் எப்படியான பாதிப்பினை ஏற்படுத்துகின்றது என்பது புலனாகின்றதல்லவா?

எமக்குத் தேவையான பொருட்களிற் பலவற்றை எமது நாட்டிலேயே பெற முடியாதாகையால் அவற்றை இறக்குமதி செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகின்றது. அதிலும் விசேஷடமாக உணவுப் பொருட்களில் பெரும்பாலானவற்றை இறக்குமதி செய்தே ஆக வேண்டும். இல்லையேல் பட்டினி மரணங்கள் ஏற்படுவதைத் தவிர்க்க முடியாததாகிவிடும். இவ்வேளையில் இறக்குமதி செய்வதற்கு வேண்டிய அந்நியச் செலாவணியை பெருமளவில் ஏற்றுமதி வருவாயிலிருந்தே பெற வேண்டியிருக்கின்றது. ஆனல் ஏற்றுமதிப் பொருட்களின் விலை ஆண்டு தோறும் வீழ்ச்சிக்குட்படுவதனல் அதனல் பெறக்கூடிய அந்நியச் செலாவணி வருமானமும் குறைந்து கொண்டே செல்கின்றது. இந் நிலையில் எமது நாட்டில் அந்நியச் செலாவணி நெருக்கடி அல்லது பற்றுக்குறைப் பிரச்சினை எழுகின்றது.

ஆனல் அதே வேளையில் 1962—ம் ஆண்டிலிருந்து இறக்குமதிப் பொருட்களின் விலையும் உயர்ந்து கொண்டே செல்கின்றது. அதிலும் அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலை மென்மேலும் அதிகரித்த வண்ணமேயிருக்கின்றது. ஏனெனில் உற்பத்தி செய்யும் நாடுகளில் இப்பொருட்களின் உற்பத்தியானது இயற்கை செயற்கைக் காரணங்களினல் பாதிக்கப்பட்டுக் குறைந்தமையால் உலகச் சந்தையில் இவற்றின் நிரம்பலில் (Supply) பற்றுக்குறை ஏற்பட்டு கேள்வி (Demand) அதிகரித்தமையே. இதனல் பற்றுக் குறையான உணவும் பொருட்களை ஏனைய நாடுகளுடன் போட்டியிட்டு இலங்கையும் கொள்வனவு செய்ய வேண்டியிருப்பதனல், அதிக விலையினை அவற்றுக்குக் கொடுக்க வேண்டியிருக்கின்றது. இறக்குமதியும் அத்தியாவசிய உணவுப் பொருட்களாகவே பெரும்பாலும் இருப்பதனல் அவற்றின் விலை உயர்வுக்காக இறக்குமதியை முற்ருக நிறுத்த முடியாதிருப்பதும் கண்கூடு.

1972—ம் ஆண்டு ஜூலை மாதம் எமது அத்தியாவசிய இறக்குமதிப் பொருட்களான அரிசி, கோதுமை, மா, சீனி என்பவற்றின் விலைகள் முறையே ஒரு தொன் 34 பவுண், 42 பவுண், 74 பவுணுகவிருக்கையில் மறு வருடம் அதாவது 1973-ம் ஆண்டு ஜூலை மாதம் அவற்றின் விலைகள் முறையே 56 பவுண், 104 பவுண், 111 பவுணுக திடீரென ஏற்றம் கண்டது. இது இலங்கை போன்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறை விருத்தி இறக்குமதி நாடுகளுக்கு பெரும் தாக்கத்தினை ஏற்படுத்திவிட்டது என்ருல் மிகையாகாது. உணவுப் பொருட்களின் விஷஜுர விலையேற்றத்தினை 1963-ம் ஆண்டில் உணவுப் பொருளின் விலைச் சுட்டெண் 100 ரிலிருந்து 1973-ம் ஆண்டில் 140 ஆக அதிகரித்திருப்பதும் தெட்டெனப் புலப்படுத்துகின்றது.

மேலும் இலங்கையின் ஜனத்தொகை வருடாவருடம் அதிகரித்து வருவதும் பிரச்சினைகளின் வேகத்தைத் துரிதப்படுத்துகின்றன. ஜனத்தொகையில் அரைவாசிக்கு மேற்பட்டோர் 20 வயதுக்குட்பட்டவராவர்: இவர்களிற் பெரும்பாலோர் நாட்டில் எவ்வித பொருள் உற்பத்தியிலும் ஈடுபடாது. ஆனுல் ஏனையோரின் உற்பத்தியினை நுகர்ந்து கொண்டிருக்கின்றனர். இந்நிலையில் இவர்களுக்கு வேண்டிய உணவுப் பொருட்களின் உற்பத்தி போதாமையால் அவற்றையும் இறக்குமதி செய்ய வேண்டிய நிர்ப்பந்தமே ஏற்படுகின்றது. இதனுல் அந்நியச் செலாவணிப் பற்ருக்குறைப் பிரச்சினை மென்மேலும் அதிகரித்த வண்ணமே இருக்கின்றது.

இலங்கையின் ஏற்றுமதிப் பொருட்களினுல் 1972-ம் ஆண்டில் பெற்ற வருவாய் 233 கோடி 70 லட்சம் ரூபாவாயிருக்கையில் அதே வருடம் இறக்குமதிப் பொருட்களுக்காகச் செலவிட்ட தொகை 256 கோடி 80 லட்சம் ரூபாவாகும். எனவே வருவாயிலும் பார்க்க மேலதிகச் செலவீடு 23 கோடி 10 லட்சம் ரூபாவாகும். இவ்வேளையில் இலங்கை வெளிநாட்டு, ஏனைய சர்வதேச நிதி ஸ்தாபனத்திற்குச் செலுத்தவேண்டிய கடன் 251 கோடி 73 லட்சம் ரூபாவாகும். (1973 மார்ச் வரை)

எமது ஏற்றுமதிப் பொருட்களின் தொடரான விலை வீழ்ச்சியினுலும் இறக்குமதிப் பொருட்களின் தொடரான விலை ஏற்றத்தினுலும் இலங்கையின் அந்நியச் செலாவணிச் சொத்துக்களும் பெருமளவில் குறைந்துள்ளன. இந்நிலைமையில் எமது நாடு வெளிநாடுகளிலிருந்து பொருட்களை வாங்கும் சக்தி தொடர்ந்து குறைந்து கொண்டே செல்வதனுல் அரசாங்கம் கடுமையான இறக்குமதிக் கட்டுப் பாட்டினைக் கடைப்பிடித்து வருகின்றது.

இவ்வாருன பொருளாதார நெருக்கடி நிலைமை அபிவிருத்தியடைந்து வரும் இலங்கை போன்ற நாடுகளில் ஏற்படுவது சாதாரண நிகழ்ச்சியே. காலத்துக்குக் காலம் அரசாங்கங்கள் மாறலாம். ஆனுல் நாட்டின் பொருளாதாரப் பிரச்சினைகளை உடனடியாகத் தீர்த்துவிட முடியாது. நாட்டின் சகல மக்களும் எல்லாத்துறைகளிலும் மெய்யுற்பத்தியை அதிகரிக்கச் செய்து சுயதேவையைப் பூர்த்தி செய்யும் நாடாக மாற்றுவதே எமது பொருளாதாரப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணும் வழியாகும். அதுவரை நாட்டின் பொருளாதார முன்னேற்றம் தடைபட்டதொன்ருகவேயிருக்கும் என்ற கசப்பான உண்மையை ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும்; நர்டு நலம்பெற நாமும் நலம் பெறலாம். ஆனுல் அது எப்போது...? காலம் தான் பதில் சொல்லவேண்டும்!

★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணு ஆக்கத்திற்கா அல்லது அழிவிற்கா ?

— மூ. நாராயணமூர்த்தி —

மனிதர்களாலேயே அழிவுக்காக உண்டாக்கிய அணுக்குண்டுகளைத்தவிர ஏனைய எல்லா வழிகளிலும் அணு ஆக்கத்திற்காகவே பயன்படுகிறது. அணு உலையிலிருந்து வெளிவரும் வெப்ப ஆற்றல் மின்சாரம் உண்டாக்கப் பயன்படுகிறது. அணு உலை வெளிவிடும் காமாக்கதிர்களின் ஊடுருவும் தன்மை கொண்டு பலுமன்களை அளக்கலாம். அணு உலையில் உண்டாக்கப்படும் ஐசோடோப்புகள் மருந்துகள் தயாரிக்கவும் பயன்படுகின்றன.

ஆனல் இப்பணிகளுக்கு அணுவைப் பயன்படுத்தும்பொழுது பெருமளவு கவனம் தேவை. சிறிதளவு கவனக்குறைவும் பல விபத்துக்களை உண்டாக்கிவிடும். பட்டாசுகள் தயாரிக்கும் தொழிற்சாலை விபத்தில் ஐம்பது பேர்வரை உயிர் இழப்பார்களேயானல் அணு உலை வெடித்தால் எத்தனை பேர் இறக்கக் கூடும்? அணுபராமரிப்பில் நேரக்கூடிய தொல்லைகளை இக் கட்டுரை வழிக் காண்போம்.

அணு உலையிலிருந்து காமாக்கதிர்களோ அல்லது விஷவாயுப் பொருட்களோ கசிந்து, அளவுக்கு மீறி வெளியேறுமானல் மிருகங்கள், தாவரங்கள், மனிதர்கள் ஆகிய எல்லா உயிர்களும் அழிந்துவிடும். உயிர்கள் அழிவதோடு அல்லாமல் வருங்கால சந்ததிகளும் பாதிக்கப்படுவர். நச்சுக் கழிவுப்பொருட்கள் காற்றிலோ, நீரிலோ கலக்குமாயின் மக்களின் உரோமம் உதிரும். பிள்ளைபெறும் தன்மை அழிக்கப்படும். வியர்வைச் சுரப்பிகள் அழிக்கப்படும், கண் பார்வை குன்றும். மூளையின் ஆற்றல் மங்கும்; நரம்புத்திரள் அறுபடும். இவ்வழிவு ஆயிரம் ஆண்டுகள் வரை தொடரும். இரண்டாம் உலக மகா யுத்தத்தின் போது அமெரிக்காவின் ஒரு சிறிதளவு வெடிபொருள் அணுகுண்டு உருவத்தில் ஹிரோசிமா நகரையே அழித்து விட்டதல்லவா?

அமெரிக்க ஐக்கிய நாடுகளில் மட்டும் சுமார் 102 அணு உலைகள் அமைந்துள்ளன; இவைகளில் உபயோகப்படுத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Appropriate Technology Services
121, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA

தப்படும் எரிபொருள் பல குண்டுகளின் ஆற்றலை தன்னுள்ளே கொண்டுள்ளது. இவ்வணு உலைகளில் ஒரு சிறிய விபத்து ஏற்பட்டாலும் அணுக் குண்டு வெடிக்கப்பட்டதைப் போல் அழிவு ஏற்படும்.

அணுகுண்டு செய்யப்பயன் படும் எரி பொருளான யுரேனியம் எல்லா நாடுகளிலும் கிடைப்பதில்லை. எனவே தோண்டி எடுக்கப்படும் இடங்களிலிருந்து யுரேனியம் ரயில், கப்பல், ஆகாயவிமானம் முதலியவற்றால் உலகின் பல பாகங்களுக்கும் எடுத்துச் செல்லப்படுகிறது. இப்பயணத்தின் பொழுது அவை வெடிக்கவும் கூடும்.

கப்பல்களும் விமானங்களும் கூட அணுஉலைகளால் செலுத்தப்படுத்தப்படுகின்றன. சோவியத் நாட்டினர் 'நாட்டிலஸ்' என்ற கப்பலை அணு ஆற்றலால் உலகைச் சுற்றி வரச்செய்தனர். இக் கப்பல் பல துறைமுகங்களையும் சென்றடைந்தது. பயணத்தின் போது ஏதாவது ஒரு துறை முகத்தில் விபத்து ஏற்பட்டிருந்தால் அங்கு வாழும் அனைவரும் அழிந்துபோயிருப்பர்.

அணு உலை செயற்படும் பொழுது சில கழிவுப் பொருட்கள் உண்டாகின்றன. அவை ரேடியக் கதிர் இயக்கம் கொண்டவை. எலும்புகளையும், சதைப் பொருட்களையும், உலோகப் பொருட்களையும் அரித்து விடுபவை. இக்கழிவுப் பொருட்களைத் திரவங்களாகக் கரைத்துக் கான்கிரீட் குழாய்களில் அடைத்து இத்தொட்டிகளை நிலத்துக்கு அடியிலோ அல்லது கடலுக்கு அடியிலோ மூழ்க வைக்கின்றனர். சிலவேளை கழிவுத் தொட்டிகளில் கதிர் வீச்சுத் தாங்க முடியாமல் 20 ஆண்டுகளுக்குள் பெருத்தும், வளைந்தும், முறுக்கப்பட்டும் அழிந்து விடுமாம். இவ்வாறு கடலுக்கடியிலுள்ள கழிவுத் தொட்டி உடைந்து கதிரியக்கப் பொருட்கள் கடல் நீருடன் கலக்குமானால் கடல் வாழ் உயிர்களுக்கும், கப்பலில் செல்லும் பிரயாணிகளுக்கும் பெருந்தீங்கு விளையும். கழிவுத் தொட்டியின் நச்சுப் பொருள்கள் மக்களின் உடலைத் தாக்கி விட்டால் அதன் விளைவு அடுத்த 600 அல்லது 1000 ஆண்டுகள் வரை தொடரும். ஏனெனில் ரேடியக் கதிரியக்கம் மக்களின் சந்ததிகளையும் தாக்கும். அணு உலை அமையுமிடம் வெள்ளம், புயல், பூகம்பம் ஆகியவை ஏற்படாத இடமாக இருக்க வேண்டும். ஆனால் அணுஉலையின் வெப்பத்தைத் தணிக்க நதி அல்லது கடலுக்கு அண்மையிலேயே அணுஉலை அமைக்கப்படுகிறது. கடலுக்கருகில் அமைக்கப்பட்ட அணுஉலைகள் புயலுக்கும் பூகம்பத்திற்கும் தப்ப முடியாது. நீர் நிலைகளுக்கு வெகு தொலைவில் அணு உலை அமைக்கப்பட்டால் அதை குளிர்விக்

கப் பாதாளக் கால்வாய்கள் வழியே நீரை எடுத்துச் செல்ல வேண்டும். கழிவுப் பொருட்களை எடுத்துச் செல்லும் குழாய்களும் வெகுதூரத்திற்கு அமைக்கப்பட வேண்டும். இதனால் செலவு அதிகமாகும்.

பிரிட்டன், மேற்கு ஜெர்மனி, நெதர்லாந்து ஆகிய மூன்று நாடுகளும் சேர்ந்து எரிபொருள் சுத்தம் செய்யும் தொழிற்கூடத்தை அமைக்கப் போகின்றன. அத்தொழிற்கூடம் மேற்கு ஜெர்மனியில் தொழிற்படும். சுத்தம் செய்யும் பொறிகள் நூற்றுக்கணக்கில் சங்கிலிபோல் அமைக்கப்படும். மூலப் பொருளை ஆரம் பக்கட்டத்தில் இட்டு விட்டால் அது மிகவும் சுத்தம் செய்யப்பட்ட பொருளாக இறுதியில் வரும்.

அணு உலைக்கு யுரேனியத்தைச் சுத்தம் செய்ய தற்பொழுது அமெரிக்க ஐக்கிய நாட்டில் கிலோகிராமிற்கு 26 டாலர்கள் செலவாகின்றன. இச்செலவைக் குறைக்க மேற்கு ஜெர்மனி, பிரிட்டன், நெதர்லாந்து ஆகிய மூன்று நாடுகளும் வரப்போகும் ஆண்டில் 19 முதல் 38 கோடிவரை, 10 ஆண்டுகளுக்கு செலவிடப் போகின்றன. அமெரிக்க ஐக்கிய நாடுகள் தற்போது ஆண்டிற்கு 20,000 தொன் எரிபொருளை உண்டாக்குகின்றன. ஆனால் இந்த மூன்று நாடுகளும் சேர்ந்து 100 முதல் 250 தொன்கள் எரிபொருளையே ஒவ்வொரு ஆண்டும் வழங்கக் கூடும். எனவே ஐரோப்பிய ஆசிய நாடுகள் அமெரிக்காவிலிருந்து அணு உலை எரி பொருளை இறக்குமதி செய்து கொள்ள வேண்டும்.

உலகின் எரிபொருள் தேவை அமெரிக்காவில் உண்டாக்கப்படும் எரிபொருளின் அளவைவிட மிக அதிகமாக இருப்பதால் எரி பொருளின் விலை குறைய வாய்ப்பு இல்லை. அணு உலை எரி பொருள் விலை குறைவதாலும் ஒரு தொல்லை உண்டாகும். ஏனைய போர்க் கருவிகளைவிட அணுக் குண்டு விலை குறைந்து விடும். எனவே பல நாடுகளும் அணுகுண்டு உண்டாக்க ஆரம்பித்துவிடும். தற்பொழுது அணு ஆற்றல் மலிவான விலைக்குக் கிடைப்பதில்லை. ஆனால் அணு உலை எரிபொருள் விலை குறையுமாயின் அணுக் குண்டு பல நாடுகளிலும் பரவி விடும். இது மட்டுமா! இத்தாலி, பெல்ஜியம், சுவீடன் ஆகிய நாடுகள் மேற்கு ஜெர்மனியிடம் அதிக அளவில் அணு உலை எரி பொருள் கேட்டுள்ளனவாம்.

நெருப்பைக் கொண்டு விளக்கும் ஏற்றலாம். பல குடிசைகளை எரித்து சாம்பரும் ஆக்கலாம். அணுவின் நிலையும் இதுவே. ஆக்கப்பணியில் ஈடுபடக்கூடிய மிகச்சிறிய அணு கூட மக்களின் மன அமைதியைக் குலைத்து விட்டது! ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




(பெண் உரிமை, பெண் சமத்துவம் என்று பேசும் நாளில் அவற்றை வாழ்க்கையிலே அனுபவித்து வெற்றி கண்டுள்ள சோவியத் நாட்டின் வளமான வாழ்க்கை முறையைச் சற்று அறிந்து கொள்வோமா?)

❋ ❋ ❋

(ரஷ்ய பயணத்தைப் பலதடவை மேற்கொண்ட திரு. வி. பொன்னம்பலம் அவர்களிடம் "செங்கதிரி"ன் உங்கள் பகுதியான மென்கதிரின் சார்பில் கண்டபேட்டி.)

(பேட்டி கண்டவர்: புஷ்பா மாணிக்கம்)

★ கே. மூச்சுவிட நேரமில்லை என நம் பெண்கள் அலுத்துக் கொள்கிறார்களே, ரஷ்ய பெண்களின் மன நிலையை கொஞ்சம் கூறமுடியுமா?

ப. நம் நாட்டில் ஒரு பெண் எந்நேரமும் அடுக்களைக்குள் தான். அப்படியான நிர்ப்பந்தம் ரஷ்யப் பெண்களுக்கு இருப்பதில்லை அவர்களும் சமையல் வேலை செய்கிறார்கள். உத்தியோகத்திற்குப் போய் வந்த ஒரு சில மணித்தியாலத்திலேயே விஞ்ஞானம் கொடுத்த நவீன அடுப்படி உபகரணங்களின் உதவியோடு சமையல் வேலையை முடித்துவிட்டு மிகுதி நேரத்தை நல்ல பல துறைகளில் செலவழிக்கின்றார்கள்:

---

பெண்மணிகளே !

மென்கதிர்! இது உங்கள் கரங்களால் சிறக்க வேண்டிய பகுதி. உங்கள் உள்ளத்தில் உதிக்கும் புதுப்புது சிந்தனைகளை அனுப்பிவைத்தால் தரமானவை இப்பகுதியை அலங்கரிக்கும்.

உங்கள்
"பூங்குழலி"

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ கே. உத்தியோகத்துறையில் அவர்களுக்கு உரிய இடம் எப்படிப்பட்டது.

ப. ரஷ்யாவில் நூற்றுக்குத் தொண்ணூறு வீதம் உழைப்பாளிகளாகவே உள்ளனர் மருத்துவர்களாகவும், ஆசிரியராகவும் அதிகமாக இருப்பவர்கள் பெண்களே. அவர்கட்கு ஆண்களைப்போல் சம அந்தஸ்து கொடுக்கப்பட்டுள்ளது. சம்பளமும் தொழிலுக்குத் தக்கதே அன்றி ஆண் பெண் என்ற வேறுபாடில்லை. வேலை இல்லாப் பிரச்சினைக்கு அங்கு இம்மியளவும் இடமில்லை. தொழிலாளர் தட்டுப்பாடே அன்றிப் பொருளாதாரத் தட்டுப்பாடு அறவே இல்லை.

★ கே. எல்லாப் பெண்களும் வேலை வேலை என்று சென்றால் குழந்தை வளர்ப்பது எப்படி?

ப. குழந்தை வளர்வதற்கென குழந்தை பராபரிப்பு நிலையங்கள் உள்ளன. அவர்கள் வேலைக்குப் போகும்போது அங்கு ஒப்படைத்து விட்டால் பின் வேலையிலிருந்து திரும்பி வந்து கூட்டிச் செல்வார்கள். பராமரிப்பு நிலையங்களில் முப்பது குழந்தைகளுக்கு ஒரு தாதியும் ஒரு டாக்டரும் ஒரு பயிற்சி பெற்ற ஆசிரியரும் பொறுப்பாக இருப்பர். குழந்தைக்கு ஒரு நாளுக்கு 6 நேரம் விஞ்ஞான ரீதியாகச் சாப்பாடு கொடுக்கப்படுவதுடன் மருத்துவ வசதிகளும் செய்து கொடுக்கப்படுகிறது.

★ கே. கற்பழிப்பு பலாத்காரம் போன்ற குற்றங்கள் ரஷ்யாவில் அதிகமாக இருக்கிறதா? அப்படியாயின் அதற்கு எந்த விதமான சட்டம் உண்டு?

ப. எங்கள் நாட்டில் உள்ளது போல் அங்கு கற்பழிப்போ பலாத்காரமோ அதிகம் நடைபெறுவதில்லை. அப்படித் தப்பித் தவறி நடக்குமேயானால் அவர்கள் மன நோயாளிகளாகவே இருப்பர். அங்கு சட்டம் மிகக் கடினமாக உள்ளதால் தப்ப முடியாது.

★ கே. ஒழுக்கத்தினின்று தவறிய பெண்கள் ஓடும் ரயிலேயோ, ஒரு முழக்கயிறையோ நாடித் தற்கொலை செய்கிறார்களே அங்கும் இந்நிலை உண்டா?

ப. ஒழுக்கத்தினின்று தவறினால் அங்கு அவள் ஒழுங்கீனமானவள் என்று ஒதுக்கப்படுவதுமில்லை, அவள் தற்கொலை செய்வதுமில்லை — அந்நிலையை ஏற்படுத்தியவருக்குத் தான் கடும் தண்டனையே ஒழிய தற்கொலை செய்ய வேண்டிய அவசியமே ஏற்படாது.

★ கே. எங்கள் நாட்டுப் பெண்களுக்கும் சோவியத் பெண்களுக்குமிடையே ஏதாவது ஒற்றுமை இருக்கிறதா?

ப எங்கள் தமிழ் பெண்களைப் போன்ற பண்பாடுடைய ஓர் இனம் சோவியத் யூனியனின் ஆசிய பகுதிகளில் இருக்கின்றது. தலைமயிரை வளர்த்துள்ளனர். நீளமான கைச் சட்டையை அணிகிறார்கள். நீண்ட பாவாடை உடுக்கிறார்கள். அத்துடன் நம் நாட்டு வாத்தியங்களான புல்லாங்குழல் போன்ற இசைக் கருவிகளை உபயோகிக்கின்றனர் அன்றியும் சில இடத்தில் புரியாணி, சர்பத் போன்ற உணவு முறைகளும் காணக்கூடியதாக இருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்கள் விடுதலை இயக்கம்

இப்பொழுது எங்கும் பெண்கள் விடுதலை இயக்கம் பற்றியே பேசப்பட்டு வருகிறது. இவ்வியக்கம் எமக்கும், கிட்டாமலில்லை. மேலை நாடுகளில் இவ்வியக்கம் துரிதமாகச் செயற்பட்டு வருகிறதென்பதைப் பத்திரிகை வாயிலாகக் காண்கிறோம். எமது நாட்டில் இந்த ''வுமன்ஸ் லிப்'' என்னும் பெண்கள் விடுதலை இயக்கம் இன்னும் பரவவில்லை எனினும் காலப்போக்கில் தொற்றுநோய் போல் பரவக்கூடும் அல்லவா?

எது எப்படி இருப்பினும் இந்த விடுதலை இயக்கத்தின் தோற்றுவாயைப்பற்றி நாம் சிறிது ஆராய்ந்தே திர வேண்டும். இவ்வியக்கத்தைப் பற்றி எமது நாட்டுப் பெண் நிருபர் ஒருவர் இந்தியப் பிரதமர் இந்திரா காந்தியைக் கேட்டபோது அவர் அதற்கிறுத்த பதில் என்னவென்றால் உலகில் பல விடுதலை இயக்கங்கள் உள்ளதாகவும் அதில் ஒரு பகுதியே பெண்கள் விடுதலை இயக்கம் என்று கூறியுள்ளதாகவும் அறிந்திருக்கிறோம்.

இத்தகைய பெண்கள் விடுதலை இயக்கமும் கடந்த 5, 6 ஆண்டுகளாக மேலை நாடுகளில் வெகு மும்முரமாகச் செயற்பட்டு வருகிறது.

இனி, இத்தப்போராட்டத்தின் இலட்சியங்கள் எவை என நாம் பார்ப்போம். ஆசிரிய உத்தியோகம், மருத்துவதாதி உத்தியோகம் போன்ற ஒரு சில உத்தியோகங்களே பெண்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. ஒரு பெண் எவ்வளவுதான் திறமையுடையவளாக இருந்தாலும் உதவி மனேஜராகவோ, அல்லது செயலாளராகவோ வரலாமே யொழிய கடைசிவரை மனேஜராக வர முடியாது. அதே வேளையில் ஆண் திறமையற்றவனாக இருந்தாலும் மனேஜராக வரலாம். இந்த நிலைமை மாறி உத்தியோகங்களில் ஆண் பெண் வேறுபாடு அகற்றப்பட்டு எந்த உத்தியோகமும் அவளுக்குக் கொடுக்கப்பட வேண்டும் என்பது இவ்வியக்கத்தின் முதலாவது இலட்சியமாகும்.

இந்த இலட்சியத்தைக் கொண்டு இந்தப் பெண்கள் விடுதலை இயக்கம் இயங்குவதாற்றான் இன்று பிரதமர் பதவி தொடக்கம் சகல உத்தியோகத்தையும் பெண்கள் பார்க்க முடிகிறது. பாட்டுக்கொரு புலவன் பாரதியின் அறை கூவல் இந்த இயக்கத்தின் பலனாக மேலும் ஒருபடி முன்னேறி இன்று ஒலிப்பதனை நாம் காணமுடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றியும் மேலை நாடுகளில் ஒரு பெண் திருமணமானவுடன் ஆணுக்கு அடிமையாகித் தாய் தந்தையரை விட்டுப் பிரிந்து அவன் அழைக்கும் இடங்களுக்கெல்லாம் சென்று அவன் தலைமையை ஏற்றுச் செயற்படுகிறாள். இப்படித் திருமணம் செய்து பெண்ணை அடிமைப் படுத்தும் நிலை ஒழிய வேண்டும், தனிக்குடித்தனங்கள் அகற்றப்பட்டு தாய் தந்தையர் எல்லோருடனும் சேர்ந்திருக்க வேண்டும். ஆண் தலைமை அகற்றப்பட்டு அவள் எந்த நேரமும் எங்கும் போய் வரக் கூடிய நிலைமை உண்டாக வேண்டும். சமுதாயத்திலே ஆணைப்போல் பெண் சுதந்திரமாக இயங்க வேண்டும். திருமணம், குழந்தை வளர்ப்பு போன்ற எதுவும் அவளைக் கட்டுப்படுத்தக் கூடாது. இதுவும் மேலை நாடுகளில் இயங்கி வரும் இந்த இயக்கத்தின் இலட்சியங்களில் ஒன்றாகும்.

இன்னும் உலகத்திலே தற்போதுள்ள அரசியலமைப்பு அகற்றப்பட்டு பெண் உதவிப் பிரதமராகவோ உதவி அமைச்சராகவோ தான் வரலாம் என்ற வழக்கம் ஒழிக்கப்பட்டு அவள் பிரதமர், ஜனாதிபதி பதவிகளிலிருந்தி அமைச்சர் ஆட்சி மன்ற உறுப்பினர்வரை எப்பதவியையும் வகிக்கும் நிலைமை உருவாக்கப்பட வேண்டும் என்பதுவும் இவ்வியக்கம் வலியுறுத்திவரும் கொள்கைகளில் ஒன்றாகும்.

இவ்வாறு பல்வேறு இலட்சியங்களை முன் வைத்தே இந்த "வுமன்ஸ் லிப்" என்னும் பெண்கள் விடுதலை இயக்கம் செயற்பட்டு வருகிறது, மேலை நாடுகளில்.

இந்த இயக்கம் அமெரிக்க, ஆபிரிக்க நாடுகளிலும் நன்கு செயல் பட்டு வருகிறது. இந்த இயக்கத்தின் சாயல் நமது அயல் நாடான இந்தியாவிலும் பிரதிபலித்துக் கொண்டு வருகிறது. இனி எமது நாட்டிலும் ... ?

## எமது நாடும்

## இவ்வியக்கமும்

இவ்வியக்க இலட்சியங்களுள் முதலாவது இலட்சியமாகிய உத்தியோகங்களுள் ஆணுக்குரிய உத்தியோகம் பெண்ணுக்குரிய உத்தியோகம் என்று பாராமல், எந்த உத்தியோகமும் அவளுக்கு வழங்கப் பட வேண்டும் என்பதையும் கடைசி இலட்சியமாகிய அரசியலில் அவளுக்கு எப்பதவியும் வழங்கலாம். வழங்கப்படலாம் என்பதையும் எமது நாடு ஏற்றுக் கொள்ளலாம். இன்று பெண்ணையே பிரதமராக்கிச் செயலிலும் காட்டி விட்டது. சமுதாயமும் ஏற்றுக் கொள்ளலாம்;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் திருமணம், குடும்ப வாழ்க்கை சம்பந்தமாக இவ்வியக்கம் கொண்டிருக்கும் கருத்தை நமது நாடு கடைசி வரை ஏற்றுக் கொள்ளாது- போற்றிப் புகழாது. எமது நாடு பெண்ணைப் புனித பொருளாக, தெய்வமாக, பூஞ்செடியாக வைத்துப் பாதுகாக்கும் நாடு. எவரும் தொட முடியாத நிலையில் கோவிலுக்குள் இருக்கும் பொழுதுதான் தெய்வம் மதிப்புடையதாக இருக்கிறது. அது என்றைக்கு கோவிலை விட்டு வெளியேறி எவரும் தொடக் கூடிய நிலைக்கு வந்துவிடுகிறதோ அன்றே தன் தெய்வ மதிப்பை இழந்து விடுகிறது. பூஞ்செடியும் ஆடு மாடு மேயாத நிலையில் வேலிக்குள் இருக்கும் வரைதான் பொலிவுடையதாக இருக்கிறது. என்றைக்கு அதன் வேலி அகற்றப்பட்டு எந்த மந்தையும் உண்ணக்கூடிய நிலையை அடைகிறதோ அன்றைக்கே அது தன் பொலிவையும் அழகையும் இழந்துவிடுகிறது. அதுபோலவே ஒரு பெண்ணும் ஒரு ஆணை மணந்து அவனது மேற்பார்வையிலே அவனுக்குக் கிழ்வாழும் பொழுதுதான் எமது நாட்டில் போற்றப்படுகிறாள்.

எனவே, பெண்களும் ஆண்களைப்போல் எல்லோருடனும் பழக வேண்டும் என்ற பெண்கள் விடுதலை இயக்கத்தின் இலட்சியத்தை எமது நாடு ஏற்றுக் கொள்ளாது. ஏன்? பெண்களுமே ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். அப்படித் தப்பித்தவறி யாராவது ஏற்றுக் கொண்டால் அது தற்கொலை செய்வதற்கு ஒப்பான செயலே எனலாம். ★

— பூங்குழலி —

## கண்ணாடி பளபளக்க....

அழுக்குப் படிந்த கண்ணாடியையோ, அல்லது புகை படிந்த சிம்னியையோ பளபளவென்று சுத்தமாக்க வேண்டுமா?

சுலபமான வழி ....

பத்திரிகைத் தாளை நான்கு ஐந்தாக மடித்து அதனால் அவற்றை நன்றாகத் தேய்த்துத் துடைத்தால் சுத்தமாகி பளபளவென ஆகிவிடும். அத்துடன் நீலம் கலந்த தண்ணீரில் கடதாசியை ஊற வைத்துக் கழுவினால் இன்னும் நன்றாகப் பளபளக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிந்தனைக்கு ஒரு விருந்து

இல்லை! இல்லை!
நிம்மதி இல்லை! சந்தோசமில்லை! நிறைவில்லை!

எதிலெடுத்தாலும், எதை நோக்கினாலும் எங்கே பார்த்தாலும் இதே பல்லவிதான்!

காரணம் என்ன? பற்றாக்குறை!

இன்றைய விலைவாசியில், போதிய பொருளாதாரம் அற்ற நிலையில் ஒவ்வொரு குடும்பமும் அன்றாடத் தேவையைச் சமாளிக்க முடியாது திணறுகிறது வாஸ்தவம் தான்!

எப்படியோ ஏதோ ஒரு வழியில் அதை நிவர்த்தி செய்துதான் ஆகவேண்டும்! இல்லையேல் மேலே கூறிய பல்லவி தொடர்வது மட்டுமல்ல, குடும்பத்தில் வெறுப்பையும், கசப்பையும், பிரச்சனையையும் அதனால் ஒற்றுமை குலைவையும் ஏற்படுத்துவது மட்டுமல்ல; வேண்டாத சம்பவங்கள் பலவையும் ஏற்படுத்தி விடும். ஒவ்வொரு குடும்பத்திலும் இப்படி நடக்கத் தொடங்கினால் அதனால் நமது சமூகம், நாடு பாதிக்கப்படும்.

ஆம்! குடும்பத்திலுள்ள ஆண்மகன் மட்டுமல்ல குடும்பத் தலைவியும் கூட குடும்பத்தைச் செவ்வனே நடத்தப் பாடுபட வேண்டும். அவள் வழியில்தான் செல்ல வேண்டுமல்ல. வீட்டிலிருந்தே பல வழிகளில் தன் குடும்பத்தின் பொருளாதார நிலையைச் சமன் படுத்த ஆவன செய்யலாம். அவை என்ன வழிகள் என்பதை அடுத்த முறை பார்ப்போம்.

— நீலா —

# இளமையாய் இருக்க

முதுமை அடைவதை யாரும் விரும்பமாட்டார்கள். எப்போதும் இப்படியே இருந்து விட்டால் .. ... ? என்று நினைப்பர். இளமை குன்றாமலிருக்க வாயை 'ஊமை' என்று வைத்திருக்காமல் நன்றாக சிரியுங்கள். எப்பொழுதும் சிரித்த முகத்துடன் இருந்தால் அழகு கெடாது- இளமை குன்றாது. நீண்ட நாட்கள் இளமையாய் இருக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லதொரு வீடு கட்ட...

— சர்வசித்தன் —

(சென்ற இதழின் தொடர்ச்சி)

## ஒப்பந்ததாரர் (Contractor)

மனை மதிப்பீட்டின் பின்னர் குடியிருப்பாளர் ஓர் ஒப்பந்த தாரரை அணுகுவார். இவ்வொப்பந்ததாரர் சில உபவிதிகளுக்கு (Bye-Laws) அமைய தமது ஒப்புதல் அறிவிப்பை (Tender) ஏற்றுக் கொள்வார். இதன் பின்னர் அக்கட்டிட வேலைகள் யாவும் ஒப்பந்தகாரரின் மூலமாகவே செய்து முடிக்கப்படும்.

பொறியியல் மற்றும் கட்டட அமைப்பு வேலைகளில் நன்கு தேர்ச்சியுடையவரான ஓர் ஒப்பந்ததாரரை குடியிருப்பாளர் ஏற்படுத்திக் கொள்வதே வீடு கட்டுதலிலுள்ள மிக முக்கிய அம்சமாகும். குறிப்பிட்ட விகிதாசாரத்துடன் (Proportion) கூடிய கலவைகளையும் ஏனைய கட்டடப் பொருட்களையும் அவர் கையாளும் முறையிலேயே அவர் கட்டும் வீட்டின் ஆயுட்காலம் தங்கியுள்ளது. ஆகையால் நம்பிக்கையும், நாணயமும் மிக்க ஓர் ஒப்பந்ததாரரைக் குடியிருப்பாளர் தேர்ந்தெடுப்பதில் மிகக் கவனமாகச் செயற்பட வேண்டும்.

கட்டடவேலை முடியும்வரை அந்த இடத்திலேயே கடமையாற்றுபவராயும், கட்டட நிர்மாணருக்கேற்ற ஓர் மேற்பார்வையாளரை ஒப்பந்ததாரர் நியமிக்க வேண்டும். இவை தவிர கண்காணிப்பவரின் (Foreman) தேவைக் கேற்ப அவரது அலுவலகத்திற்குரிய இடத்தையும் அமைத்துக் கொடுக்க வேண்டும்.

ஒப்பந்ததாரரிடம் கையளிக்கப்பட்டபின் நிர்மாண வேலைகளில் ஏற்படும் எல்லாவித மாறுதல்களுக்கும், அரசியல் அதிகார தலையீடுகளுக்கும் அவரே பொறுப்பாளியாக விளங்குவதால் ஒப்பந்தத்தை ஏற்றுக் கொள்ளும் முன்பே அவ்வப்பொதுக் குழுக்கள், நில உரிமையாளர் என்பவர்களோடு தீர்க்கமானதொரு எழுத்துரிமையை அவர் பெற்றுக் கொள்ள நேரிடும்.

கட்டட வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது நிர்மாணருக்கு வேண்டியவாறு தாங்குசார (Sporing) அமைப்புக்கள், மற்றும் அத்திவாரத்தைக் கெட்டிப் படுத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வதற்காக நீர்ப்பாய்ச்சுதல் இதற்குத் தேவையான பொறிகள், 'பம்பு'கள் என்பவற்றையும், தொழிலாளர்களுக்கு வெயில், மழை என்பனவற்றிலிருந்து காப்பளிக்கும் வண்ணம் தற்காலிகமாக அமைக்கப்படும் குடிசைகள் (Temporary Sheds) வேலை செய்யும் உபகரணங்கள் என்பவற்றிக்கும் ஒப்பந்ததாரரே வகை செய்து கொடுக்க வேண்டியவராகிறார்.

இவ்வாறு ஓர் கட்டிடம் பூர்த்தி செய்யப்படும்வரை அதற்குப் பொறுப்பாக இயங்கும் இவ்வொப்பந்ததாரர் மதிப்பிடப்பட்ட செலவுத் தொகையை விடச் சிறிது கூடினாலும் அல்லது குறைந்தாலும் அதனை பிரஸ்தாபிக்க முடியாதவாறு சட்ட மியற்றப்பட்டிருப்பதால் இவர்கள் அனுபவம் மிக்கவர்களாயும் இருத்தல் அவசியம்.

நிலப்பட வரைஞர், மதிப்பீட்டாளர், ஒப்பந்ததாரர் இவர்களது முயற்சியோடு கட்டடவமைப்பு எவ்விதத்தில் சம்பந்தப்பட்டுள்ளது என்பதை மேலே பார்த்தோம். இம்மூன்று தரப்பாரதும் சேவை பரிபூரணமாகக் கிடைக்குமாயின் சொந்தக்காரருக்குச் சிறந்ததோர் கட்டடம் (வீடோ அன்றி வேறெதுவோ) கிடைக்கும் என்பதில் ஐயமேதும் உண்டோ?

## வரி விதிக்காத நாடு

வரி விதிக்காத நாடும் இன்று உலகத்திலே இருக்க முடியுமா என்று கேட்கிறீர்களா? ஆம்; அரேபிய நாடுகளில் ஒன்றான குவைத்தில் வரியே விதிக்கப்படுவதில்லை.

குவைத்தில் ஏறக்குறைய ஐந்து லட்சம் மக்கள் வாழ்கின்றார்கள். இவர்களுக்கு ஒரு வரியுமே இல்லை. வருமானவரி, விற்பனைவரி, சொத்துவரி எதுவுமே கிடையாது. ஏன்? தொலைபேசிக் கட்டணம் கூட இல்லை.

வரியே விதிக்கப்படாமல் அரசாங்கம் எப்படி இயங்குகின்றது என்று கேட்கிறீர்களா? இங்கு பெருந்தொகையான அளவில் பெட்றோல் கிடைப்பதால் வருடந்தோறும் 500 கோடி ரூபா வருமானம் கிடைக்கின்றது. இதில் 250 கோடி ரூபா எண்ணெய்க் கம்பனிகளுக்குப் போக மிகுதி வருமானத்தைக் கொண்டே அரசாங்கம் இயங்குகின்றது. இதைப்பார்த்து விட்டு நீங்களும் குவைத்தில் (Kuwait) வாழ ஆசைப்படாதீர்கள்.

— எம்மெஸ்லெம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிந்தனை செய் மனமே

- சிவம் -

**உங்களுக்கு ஒரு பிரச்னை ஏற்பட்டிருக்கின்றது. அதிலிருந்து விடுபடுவதற்காக நீங்கள் மிகவும் கஷ்டப்படுகிறீர்கள். வேறு சிலர் தமது பிரச்னைகளை வெகு சுலபமாகத் தீர்த்து விட்டு 'ஜாலி'யாக இருப்பதையும் பார்க்கிறீர்கள். இதை நினைத்து ஆச்சரியப்படவும் செய்கிறீர்கள்.**

உலகில் மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவருக்கும் பிரச்னைகள் ஏற்படுவது இயற்கை. ஆனல் சிலரால் தமது பிரச்னைகளைத் தீர்த்து மகிழ்ச்சியாக இருக்க முடிகிறது. வேறு சிலர் தமது பிரச்னைகளுக்குத் தீர்வு காண முடியாமல் துன்பத்தில் வாழ்ந்து தவிக்கின்றனர்.

உண்மையில் ஒவ்வொரு மனிதனும் தனக்கேற்படும் பிரச்னைகளுக்கான தீர்வுகளைத் தாமே பெற்றுக் கொள்ளும் சக்தியைக் கொண்டிருக்கின்றன. மனிதனுக்கு மட்டுமன்றி மிருகங்களுக்கும் கூடத் தமது பிரச்னைகளைத் தீர்த்துக் கொள்ளும் வல்லமை உண்டு. இதனைப் பல அறிஞர்கள் பல விதமான பரிசோதனைகள் மூலம் நிரூபித்துள்ளனர்.

— கூண்டுகளில் அடைக்கப்பட்டிருக்கும் குரங்குகளிற்கருகில் கூண்டிற்கு வெளியே அவற்றின் கரங்களுக்கு எட்டாத தொலைவில் சில உணவுப் பொருட்களை வைத்து விட்டு, அவற்றுக்கருகில் சிறு தடிகள் வைக்கப்பட்டபோது அவை அந்தத் தடிகளின் உதவியுடன் அந்தப் பழங்களை எடுக்க முயற்சித்தன.

— ஒரு கூண்டிற்குள் அடைக்கப்பட்ட எலிகள் தம்மை அந்தக் கூண்டிலிருந்து விடுவிப்பதற்கான முயற்சியில் சலிவாது ஈடுபடுவதைக் காணக் கூடியதாக இருந்தது.

— ஒரு வீட்டிற்குள் பூனையொன்றை விட்டு விட்டு வழமையாக அது போய் வருவதற்குப் பயன்படுத்தும் துவாரத்தை மூடி விட்டதும் அது வெளி வருவதற்கு வேறொரு பாதையை விரைவிலேயே கண்டுபிடித்து விட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு விலங்குகள் தமது பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதில் தமது முழுத்திறமையையும் காட்டுகின்றன.

மனிதர்களுக்கு ஏற்படுகின்ற பிரச்சினைகள் பொதுவாக இது போன்ற — மிருகங்களுக்கேற்படுகின்ற - சாதாரண பிரச்சினைகளை விடச் சிக்கல் மிகுந்தவை என்பது உண்மை தான். எனினும் நாம் அவற்றை எப்படித் தீர்க்கலாம், எங்கே அப்பிரச்சினைகளுக்கான காரணங்கள் உண்டு என்பவை பற்றிச் சிந்திப்பதில் தான் தவறி விடுகின்றோம்.

பிரச்சினைகள் ஏற்பட்டதும் முதலில் அதனை நன்கு அலசி ஆராய வேண்டும். அப்பிரச்சினை பற்றி மேலோட்டமாகப் பல முறை சிந்தித்து அதற்கான காரணங்களை அறிய முற்பட வேண்டும். அந்தப் பிரச்சினை எப்படி உண்டானது அது ஏற்படுவதற்கான அடிப்படை காரணங்கள் எவை? என்று அவதானித்து அவையாவற்றையும் ஓர் ஒழுங்கு முறைப்படி கோவைப் படுத்தி மனதிலே பதிய வைத்துக் கொள்ளல் அவசியம்.

இதன் பின்னர் பிரச்சினைகளுக்கேற்ற வண்ணம் இன்ன இன்ன வகையாக இவற்றைத் தீர்க்கலாம் என்று தீர்மானித்துக் கொள்ளுதல் முடியும்.

அத்தோடு, இத்தகைய பிரச்சினைகளை இனிமேலும் ஏற்படாதிருக்க என்ன செய்யலாம் என்பதையும் சிந்தித்து வைத்துக் கொள்ளுதல் நன்று.

நமக்கு ஏற்படுகின்ற பிரச்சினைகளில் அதிகமானவை பிரச்சினைகளே அல்ல! மிகவும் சாதாரணமான — உடனேயே மறந்து விட வேண்டிய — பல சிறிய விஷயங்களைக் கூட நாம் பிரச்சினைகளாகக் கருதிக் கொண்டு "இவற்றை எவ்வாறு தீர்க்கப் போகிறோமோ?" என்று எண்ணி எண்ணி மாய்கிறோம்.

பிரச்சினைகள் தோன்றியதுமே அவற்றைக் கண்டு பயந்து திகைப்பதனால்தான் நாம் பெரும்பாலும் சங்கடப் படுகின்றோம். வாழ்க்கையை 'ஈஸி' யாக எடுத்துக் கொள்ளப் பழக வேண்டும்.

ஒருவன் தனது மேலதிகாரி அருகில் வரும்போது அதனைக் கவனியாது ஏதோ எழுதிக் கொண்டிருக்கிறான். அவர் அருகில் வந்து நின்றதும்தான் அவசர அவசரமாக எழுந்து நிற்கின்றான். மேலதிகாரி சென்ற பின்பு தான் கவலையீனமாகச் செய்து விட்ட செய்கை பற்றி, அவர் வரும்போது எழுந்து மரியாதை செய்யாததையிட்டு அவர் என்ன நினைத்துக் கொள்வாரோ? என்று எண்ணிக் கவலைப் படுகிறான். அது அவனுக்கு ஒரு பெரிய பிரச்சினையாக மாறி அன்று முழுவதும் அவன் மனத்தை அலைக்கழிக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையாக அது பற்றி அந்த மேலதிகாரி எதுவும் தவறாக நினைக்கவில்லை. அவன் தான் வீணாக அதை ஒரு பெரும் பிரச்சினையாக எண்ணிக் கவலைப்படுகிறான்.

உலகில் பெரும்பாலான மக்கள் என்றுமே மிகவும் கவலையோடு இருப்பதற்கான காரணம் இதுதான். அவர்கள் வாழ்வின் சுகங்கள் யாவற்றையும் நன்கு அனுபவித்துக் கொண்டிருந்த போதிலும் - இதுபோன்ற மிகச்சிறிய விஷயங்களைப்பற்றியெல்லாம் கவலைப்படுவதன் மூலம் இன்பத்தைத் துன்பமாக்கி விடுகிறார்கள்.

இவ்வித பிரச்சினைகளை மறந்து விடுவதற்கும், இவை ஏற்படாமல் செய்வதற்கும் ஒரு நல்ல வழியைப் பின்பற்றலாம்.

ஒவ்வொரு நாளின் ஆரம்பத்திலும் முடிவிலும் அந்த நாளைப்பற்றிச் சிந்திப்பதை ஒரு வழக்கமாக ஏற்படுத்திக் கொள்வதே அது!

அதிகாலையில் எழுந்ததும் அன்றைய தினம் முழுவதும் நாம் செய்ய வேண்டியவை யாவை என்று ஓர் ஒழுங்கான அட்டவணையை நமது மனத்தில் நிச்சயப் படுத்துதல் முதலாவது காரியம்.

அன்றைய தினம் முடிவுற்று நாம் படுக்கைக்குச் செல்லும் போது சிறிது நேரம் அமைதியாக இருந்து அத்தினத்தைப் பற்றிச் சிந்தித்தல் நல்லது. இதன் மூலம் அன்று செய்த நல்ல காரியங்கள், தவறான செய்கைகள் எல்லாம் நம் நினைவிற்கு வரும். அதன் மூலம் தவறுகளைத் திருத்தி நல்ல வழிகளைக் கடைப்பிடிக்க முடியும்.

எனவே, சிந்தியுங்கள்! இதன் மூலம் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ளுங்கள்.

★

---

உங்கள் அபிமான ஏடான 'செங்கதிரி'ல், குடும்பத்திலுள்ள அனைவருக்கும் முக்கியமாக மாணவ மாணவிகளுக்கும் பிரயோசனப் படக்கூடிய வகையில் சிறந்த அம்சங்கள் வெளிவருகின்றன. இதற்குக் கதை, கவிதை, கட்டுரைகள், அபிப்பிராயங்களை எழுதுங்கள். ஆசிரியர் குழுவினால் தேர்ந்தெடுக்கப்பட்ட தகுதி வாய்ந்தவைகள் நிச்சயமாக பிரசுரிக்கப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செய்திக் கதிர்

## காசோலை மோசடிக்காரர் இனி தப்ப முடியாது!

பிரிட்டனில் காசோலை, கடன் கார்ட் என்பவற்றில் நடைபெறும் மோசடிகளைக் கண்டுபிடிக்கும் புதிய முறையொன்று அமுலுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

இம்முறையின் கீழ் பொருட்களை வாங்குபவரோ அல்லது சேவைகளைப் பெற்றுக் கொள்பவரோ தன் பெரு விரல் அடையாளத்தை காசோலைக்குப் பின்னால் வைக்க வேண்டும். பெருவிரல் அடையாளத்துடன் உள்ள காசோலையை பதிவு இயந்திரம் ஒன்றில் செலுத்திப் பரிசோதனை செய்யப்படுவதன் மூலம் மோசடிகள் கண்டுபிடிக்கப்படுகின்றன.

இப்புதிய முறையினால் அதிகரித்து வரும் மோசடிக் குற்றங்களை வெகுவாகக் குறைத்து விட முடியும் என எதிர் பார்க்கப்படுகின்றது. அமெரிக்காவில் இம்முறை வெற்றிகரமாக இயங்குவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## புதுமையான அழைப்பிதழ்

சென்னையிலுள்ள "வீகம்சி புளுடைமன்ட் தியேட்டர்ஸார்" பத்திரிகையாளர்களுக்கு புதுமையான முறையில் அழைப்பிதழ்கள் அனுப்புவதில் கைதேர்ந்தவர்கள். ஒவ்வொரு படங்களுக்கும் ஒவ்வொரு பாணியில் அழைப்பிதழ்கள் அனுப்புவார்கள். அவர்கள் ஒரு முறை "பத்து லட்சம் ரூபாய்" என்ற ஹிந்திப் படத்துக்கு அனுப்பிய அழைப்பிதழ் முன்னைய அழைப்பிதழ்கள் அனைத்தையும் தோற்கடித்து விட்டது.

உண்மையான ஒரு ரூபாய் நோட்டையே அவர்கள் அழைப்பிதழாக பத்திரிகையாளர்களுக்கு அனுப்பியிருந்தார்கள். அத்துடன் கீழ்க்கண்ட குறிப்பும் இருந்தது. "எங்கள் காசாளரிடம் இந்தப் பணத்தை கடன்வாங்கினேன். அவர் என்னைத் தேடிக் கொண்டிருக்கின்றார். நீங்கள் வராவிட்டால் எனக்கு ஒரு ரூபாய் நஷ்டம்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடத்தலைத் தடுக்க புது வழி!

எந்த நாடும் எவ்வளவுதான் உன்னிப்பாக இருந்தாலும் கடத்தல்களைக் கட்டுப்படுத்த முடியவில்லை. ஒவ்வொரு நாடும் கடத்தலை முறியடிப்பதில் தோற்றே விடுகின்றன. இலங்கையும் இதற்கு விதிவிலக்கல்ல. ஆனால் கடத்தலைக் கண்டுபிடிப்பதற்கான சுலபமான கருவியொன்று இப்போது கண்டு பிடிக்கப்பட்டிருக்கின்றது.

கடத்தல்காரர்களுக்குப் பெரியதொரு சவாலாகவிருக்கும் இந்தவினக் கருவி உடலுறுப்புக்கள், சிமெந்து, மண், மரம், துணிகள் போன்றவற்றினை ஊடுருவி உள்ளே இருக்கும் உலோகங்களைக் கண்டு பிடித்து ஒருவித ஒலி மூலம் ஏனையோருக்கும் தெரிவித்துக் கடத்தலை அம்பலப்படுத்தி விடுகின்றது. இக்கருவி சிறிது நேரத்தில் பிரயாணப் பெட்டிகளையோ, வேறு எந்தப் பொருட்களையோ சிதைவின்றி பரிசோதித்து விடுகின்றதாம் ஒருவரின் உடலைத் தொட்டுப் பரிசோதிக்காமலேயே இக்கருவி அவரிடம் கடத்தல் பொருட்களோ, அல்லது தீங்கு விளைவிக்கும் ஆயுதங்களோ இருக்கின்றதா என்பதைக் கண்டு பிடித்து விடக் கூடியதாகும்.

இக் கருவியின் உதவியால் கடத்தல் காரர்கள் மட்டுமன்றி, விமானங்களை நடுவானில் துப்பாக்கியைக் காட்டி கடத்தும் பயங்கரவாதிகளும் (Hijackers) முறியடிக்கப்படுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

## வளி எது? காற்று அதுவல்ல!

இன்று சர்வசாதாரணமாக வளி (Air) என்பதையும் காற்று (Wind) என்பதையும் ஒரே சொல்லாகவே, ஒரே பொருளைக் குறிப்பனவாகவே காதப்படுகின்றன. ஆனால் புவியியல் ஆய்வில் இவை இரண்டும் வெவ்வேறு சொல்லில் வெவ்வேறு பொருளில் நோக்கப்படுகின்றன என்ற உண்மை பலருக்குத் தெரியாது.

புவியியலின் காலநிலையில் ஆய்வில் வளி என்பது அசைவற்ற வாயுவாகும். இவ்வசைவற்ற வாயு அசைவுறுகின்றது. இவ்வாறு அசைவுறும் பொழுது காற்று என்ற பெயரைப் பெறுகின்றன. சாதாரணமாக நாம் அனுபவிப்பது அசைவுறும் வளியின் இயக்கமான காற்றையே.

எக்மெல்லிலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பின்பக்கமாக கார் ஓட்டுகையில் புதிய ஒலி !



காரைப் பின்பக்கமாக ஓட்டும் பொழுது காரிற்குப் பின்னால் உள்ள தந்தித் தூண்கள், மரங்கள், கட்டிடங்கள், ஆட்களிலும் மோதி விபத்துகள் ஏற்படுவது சாதாரணமாக நடை பெறுவதாகும். இவ்வாறான மோதலினால் ஏற்படும் விபத்தினைத் தவிர்க்க ஜப்பானிலுள்ள தனிப்பட்ட நிறுவனமொன்று புதியதொரு ஒலி விரைவு கடந்த கருவியைக் கண்டுபிடித்துள்ளது.

காரின் பிற்பகுதியில் இக்கருவி அமைக்கப்படுகின்றது. கார் பின்பக்கமாகச் செல்லுகையில் பின்னால் உள்ள மோதவிருக்கும் பொருள் 9 அடி தூரத்திற்குள் வந்தவுடன், ஒலி விரைவு கடந்த கதிர்களைக் கடத்தி காரினுள்ளே இருக்கும் ஒரு கருவியில் சத்தத்தை உண்டாக்குகின்றது. இச் சத்தத்தைக் கேட்டவுடன் கார்ச் சாரதி பின் பக்கமாக ஏதோ பொருள் காருடன் மோதவிருப்பதை உணர்ந்து காரை நிறுத்தி விடுகின்றார். இவ்வாறு ஆபத்து தவிர்க்கப்படுகின்றது.

## காயத்தினை ஆற்றும் இரத்தம்!

மியூனிச் நகரத்தில் நடைபெற்ற ஜெர்மன் சத்திரசிகிச்சைச் சங்கத்தின் 70–வது மகா நாட்டில் ஹாம்பேர்க் பல்கலைக்கழக உடற் கூற்று இரசாயனத்துறை பேராசிரியர் டாக்டர் கூஹ்நா காயம் ஆற்றும் துறையில் நிகழும் நிகழ்ச்சிகளைப் பற்றி விளக்கிக் கூறி யாவரையும் பிரமிக்கச் செய்து விட்டார்.

"காயத்தை ஆற்றுவதில் இரத்தம் செய்யும் பணி முக்கியமானதாகும். ஜீவ அணு வளர்ச்சிக்கு வேண்டிய பொருட்கள் காயமுற்ற பகுதிக்கு இரத்தத்துடன்தான் விரைந்து செல்கின்றன. அத்துடன் புதிய உறுப்புக்களுக்கு வேண்டிய புரதச் சத்தையும் இரத்தமே கொண்டு வருகிறது. சமுகத்தில் பெரிய விபரீதங்கள் நிகழும்போது (மனிதர்களால்) எச்சரிக்கை ஒலிகள் அனுப்பப்படுவதுபோல மனித உடலின் காயம்பட்ட பகுதியிலிருந்து தூரத்தில் இருக்கும் உறுப்பில் கூட காயத்தை குணப்படுத்துவதற்கான பொருட்கள் உற்பத்தியாகி காயம் பட்ட பகுதிக்கு எடுத்துச் செல்லப்படுகின்றன. ஆகவே உடலில் ஏற்படும் மிகச் சிறிய காயம் கூட உடம்பு முழுவதையும் எப்படியாவது ஒரு விதத்தில் பாதிக்கவே செய்கின்றது"

— இக்பால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதிர்க் கதிர்

# இனிய விற்பனை

# கடின சாதனை!

சென்ற மாதம் தென்னங்கன்றுகள் நாட்ட தோட்டத்திற்குப் போயிருந்தீர்கள். இப்போது உங்களை எமது விற்பனை நிலையத்திற்கு அழைக்கின்றோம். ஏன் என்று கேட்கிறீர்களா?

உங்களிடம் 255 டொபிகள் தரப்போகிறோம். அவற்றை நீங்கள் விற்பனை செய்ய வேண்டும். ஆனால் ஒரு நிபந்தனை. உங்களிடம் எட்டு பைக்கற்றுகள் தரப்பட்டுள்ளன. அவற்றினுள் அந்த 255 டொபிகளையும் பகிர்ந்து போட வேண்டும்.

(ஒவ்வொன்றிலும் சமமான எண்ணிக்கை இருக்க வேண்டியதில்லை)

இப்போது உங்களிடம் 1 முதல் 255 வரை எந்த அளவு டொபி கேட்டாலும் பைக்கற்றுகளைப் பிரிக்காமல் தேவையான அளவு டொபியை கொடுக்கத்தக்கவிதமாக அந்தப் பைக்கற்றுகளில் பகிர்ந்து போடப்பட்டிருக்க வேண்டும்; அப்படியானால் ஒவ்வொரு பைக்கற்றிலும் எத்தனை டொபிகள் போடப்பட வேண்டும்? எங்கே விற்பனையை ஆரம்பியுங்கள் பார்க்கலாம்.

இதற்கான விடையை புதிர்க்கதிர் படிவத்துடன் ஒகஸ்ட் மாதம் 30-ம் திகதிக்கு முன் எமக்கு அனுப்பிவைக்க வேண்டும். சரியான விடையை அனுப்பும் இரு அதிர்ஷ்டசாலிகளுக்கு ஒரு வருடத்திற்கு "செங்கதிர்" அனுப்பிவைக்கப்படும். ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட விடைகளை அனுப்பலாம்; ஆனால் ஒவ்வொன்றும் ஒவ்வொரு படிவத்துடன் அனுப்பப்பட வேண்டும்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்னையும் திணறவைக்கும் !

## சென்ற இதழில் வெளி வந்த புதிருக்குரிய சரியான விடை

சென்ற இதழ் போட்டிக்குச் சரியான விடையைப் பன்னிரெண்டு பேர் அனுப்பி இருந்தனர். அவர்களில் பரிசுக்குரிய அதிர்ஷ்டசாலிகள் இருவர் இதோ:

1. கா. திருநாவுக்கரசு, ஆலடி வட்டாரம், புலோலி
2. சி. ஜெயரட்ணம், 15/1, நாச்சிமார் கோவில் வீதி, வண்ணார்பண்ணை யாழ்ப்பணம்

### சரியான விடை அனுப்பிய ஏனைய வாசகர்கள்:

1. பி. என். ராமஜெயம், தோரு தோட்டம், வெலம்பொடை
2. த. சிவதாசன், டி. ஆர். ஓ. பங்களா, களுவாஞ்சிக்குடி
3. செல்வி ஜெயசீலி அமிர்தநாதர், கன்னியர்மடம், மகாவித்தியாலயம், யாழ்ப்பாணம்
4. ஐமுனு குழந்தைவேலு, நவாலி தெற்கு, மானிப்பாய்
5. எம். எஸ். எம். உவைஸ், 41, கமால் வீதி, யாழ்ப்பாணம்
6. த. தனேஸ்வரி, மே/பா வ. தம்பிப்பிள்ளை, ஞானசாரியார் வீதி, கரவெட்டி
7. ஆர். சிறீதரன், 149, மத்திய வீதி, திருகோணமலை
8. எம். வை. மூகம்மது சுபைர், 4, கமால் வீதி, சோனக தெரு, யாழ்ப்பாணம்
9. த. ரவிராஜ், 109, அரசடி வீதி, கந்தர் மடம், யாழ்ப்பாணம்
10. ஜே. செல்வராயன், மே/பா திருமதி எம். குமாரசாமி, வட்டுக்கோட்டை மேற்கு, வட்டுக்கோட்டை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரயாணம் என்பது பொதுவாகப் பலருக்கும் ஒரு சுவையான அனுபவம். அதுவும் சொந்த நாட்டிலிருந்து வெளிநாட்டுப் பிரயாணஞ் செய்வது என்றால் சொல்லவும் வேண்டுமா? இன்றைய உலகில் அநேகமான நாடுகளில் பிரயாண வசதிகள் மக்களின் வசதிக்கு அநுகூலமாக்கப்பட்டுள்ள போதிலும் எமது நாட்டில் வெளிநாட்டுப் பிரயாணம் என்றால் ஏதோ செய்யப்படாததை செய்யப்போகின்றோம் என்ற மாதிரிக்கடும் கஷ்டத்துக்குள் ஆளாகிநாம் பல தடைகளினூடே ஊடுருவ வேண்டியது ஏனோ?

மகிழ்ச்சிதரும் வெளி நாட்டுப் பிரயாண அநுபவம் சுலபமாக எல்லோருக்கும் கிட்டாது. ஒரு வேளை கிட்டினாலும் எமது பணம் செலவு செய்யாது பிற தேசத்தைய அழைப்பின் பேரில் பல நாடுகளையும் சுற்றி வரும் அநுபவம் உண்மையிலேயே ஒரு வரப்பிரசாதமென்றே நான் கொள்கின்றேன். வெளி நாடுகளுக்குப் பிரயாணஞ் செய்து அங்கே பல புதிய நண்பர்களைக் கண்டுகளித்து அவர்கள் நற்தொடர்புகளைப் பெறுவதும், புதிய இடங்களைப் பார்ப்பதும் அவ்வவ் இடங்களில் காணுஞ் சமூகங்களின்-நாட்டுமக்களின் பழக்க வழக்கங்களை அறிந்து அவர்களிடை ஒன்றிப் பழகிவரும் நிறைவும் இருக்கிறதே, அப்பப்பா வார்த்தையில் அளவிட முடியாது.



இவ்வித அநுபவம் என்றுவது கிட்டுமா என்று நானும் ஒரு காலம் அங்கலாய்த்ததுண்டு. அதாவது இதனைப் பற்றிக் கூறினல் — அல்லது எங்காவது படித்திருந்தால் – "எமக்கு எங்கே வரப்போகுது" என்று நாம் ஏங்குவது உண்டல்லவா? இவ்வித ஏக்கம் என்னையும் விடவில்லை, வாட்டியதுண்டு. போதாக் குறைக்கு எமது நாட்டில் "பட் பட்"டென்று மாறிவரும் அரசியல் திட்டங்கள் "திராட்சை புளிக்கும்" என்று கூறி இவ்வித எண்ணங்களிலிருந்து என்னை விடுவித்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்களும் பலவுண்டு. ஆனாலும் மனித ஆசையும் அடங்குமா? இடையிடை பளிச்! பளிச்! எண்ணங்கள் தோன்றும்; சஞ்சலப் படுத்தும் ஆனாலும் சில சமயங்களில் கிட்டும் என்பது என்னளவில் உண்மையாகின.

வடக்கிலே தலை சிறந்த கல்லூரியாகிய சென். ஜோன்ஸ் பாடசாலையில் கல்வி பயின்று ஆர்வம் மிகப்பூண்டு அறிவியல் படிப்புக்கு பல்கலைக் கழகம் புகுவேன் என முறையாகப் பிரயாசைப்பட்டு ஈற்றில் அவ்வாசை நிறை வேறாமல் போனதற்கு அன்று அழுதிருப்பேன். ஆனால், இன்று ஆண்டவன் ஒவ்வொருவருக்கும் தன் வழி வகுத்துள்ளான் என்று பெருமை பேசுகின்றேன். பாடசாலையில் படித்துச் சுமார் மூன்று வருட எண்ணியல் சார்ந்த தொழில் புரிந்து — அதன் நன்மை தீமைகளை கண்டு ஆம் நாமேன் எமது துணிவில் ஒரு தொழில் ஆரம்பிக்கப்படாது என ஏங்கினேன். பெரியவர்கள், நண்பர்களின் எதிர்ப்பிடை செங்கதிர்ச் செல்வர் பண்ணைத்திட்டம், செங்கதிர்ச் செல்வர் கல்விப்பணி என இரு நிறுவனங்களை ஆரம்பித்தேன் யாழ்ப்பாணத்தில். இதற்குப்பிறகு வருவோம்.

★ ★ ★

என்னைப் பெற்றெடுத்த தாய் தந்தையர் சோதியும் - சூரியரும் என்னிடம் எதை எதிர் பார்ப்பார்களோ யாரறிவர் ? இளவயதிலேயே தந்தையை இழந்தவன். அன்னையின் அன்பின் அரவணைப்பிலேயே முன்னேறியவன். சரியோ பிழையோ என தனித்துவரீதியில் எமது ஸ்தாபனம் என்று ஒன்று அமைக்க முன்வந்தேன். அதற்கு நாமஞ் சூட்டுவதும் ஒரு முக்கிய கட்டமல்லவா? உலகத்தின் அப்பன் சூரியனே. அதே போல் என்னுள்ளத்தில் அக்கணம் தோன்றியது என் அப்பன் குமாரசூரியரே. அவரை நம்மவரும் அவர் நண்பர்களும் "சூரியர்" என்றும் அழைப்பர். ஆகவே, அவர் ஈன்றெடுத்த புதல்வன் நடாத்துவது "சண் சன்ஸ்" — செங்கதிர்ச் செல்வர் நிறுவனங்கள் என்பது சாலவும் பொருந்துமல்லவா? மாதங்கள் சில உருண்டன. பழைய கஷ்டங்கள் தேய்ந்தன — புதியவைகள் புனைப்பட்டன - வாழ்க்கை! வாழ்க்கையே களிப்பும் — கஷ்டமும் எல்லோருக்கும் சொந்தம்தானே.

★ ★ ★

செங்கதிர் உதயமாவது கீழ்த்திசையில். அதுபோல் செங்கதிர் சார்ந்த என்து எழுச்சிகளும் பிரயாணங்களும் கிழக்குத் திசையிலிருந்து ஆரம்பமானது என்பதும் ஒரு அதிசய ஒற்றுமை. இப்பிரயாண அனுபவம் — ஆரம்பம் கீழைத்தேய நாடுகளான — பிலிப்பைன்ஸ் — சிங்கப்பூர் - இந்தியா, அதாவது பிலிப்பைன்ஸ் தீவுகள் — தூரகிழக்கு நாடுகளுக்குள் அடங்கும். இந்தப் பிரயாண அனுபவங்களை செங்கதிர் வாசகர்களோடு பகிர்ந்து கொள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டுமென்ற நீண்டகால ஆசை! செங்கதிர் வெளியீட்டில் சிறிதுகாலமிருந்த தடைகளினால் நிறைவேறாமல் இருந்தது. இப்போது எமது புதிய ஆசிரிய குழுவின் அன்பான வேண்டுதலால் தூண்டப்பெற்று அவ்வாசையைப் பூர்த்தி செய்ய நினைத்துள்ளேன்.

ஒவ்வொரு இதழிலும் தொடர்ந்து அவ்வந்தேசங்களில் நான் கண்ட சிறப்பம்சங்களையும், அவர்களது வாழ்க்கை நெறிமுறைகளையும், உங்களுடன் பகிர்ந்து கொள்வதன் மூலம் நானும் அந்தப் பசுமை நிறைந்த இனிய நினைவுகளை மீண்டும் நெஞ்சில் நினைவு கூரலாமென எண்ணி இத்தொடரை ஆரம்பிக்கிறேன். இது வாசகர்களுக்கு ஒரு சுவையான பிரயாணக் கட்டுரையாகவும் — பல விஷயங்களையும் அறியத் தருகின்ற அறிவுக் களஞ்சியமாகவும் இருப்பதோடு எமது வாசகர்களும் நட்புறவுகளை ஏற்படுத்துவது, பிறநாடுகளிற் பிரயாணம் செய்வது போன்ற இவ்வித விஷயங்களில் ஈடுபட முன்வர வேண்டும் என்ற ஒரே நோக்கத்தினால்தான் நான் இதனை எழுத ஆரம்பிக்கின்றேன்.

மேலும், இத்தொடர் முழுவதும் நீங்கள் அவ்வத் தேசங்களின் இனிய காட்சிகளை நேரில் காண்பது போன்று அநுபவம் ஏற்படுத்துவதற்காக பல நிழற்படங்களை வண்ணப்படங்களாகவும் பிரசுரிக்க எண்ணியிருக்கிறேன். எமதாசிரியர் குழு என்ன கூறுவார்களோ? கணக்காளரும் முணுமுணுப்பார் என்றே நினைக்கின்றேன்.

★ ★ ★

1971-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 9-ம் திகதி காலை நேரம். செங்கதிரோன் வெண்ணொளி பரப்பிய நேரம் — நான் கொழும்புத்துறையிலுள்ள எமது பண்ணை அலுவலகத்தில் அமர்ந்து, அன்று வந்திருந்த அஞ்சல்களைப் பார்வையிட்டுக் கொண்டிருந்தேன். அவற்றுள் அமெரிக்காவிலிருந்து வந்த ஒரு கடிதம் என்னை இன்ப வெள்ளத்தில் ஆழ்த்தியது. அகில உலகப் பிரபல்யம் பெற்ற அனைத்துலக சமூக சீர்திருத்த நிறுவனத்தின் தோழமை உதவியுடன் பிலிப்பைன்ஸ் தேசத்தில் சுமார் 4 மாத காலம், பண்ணைத் தொழில் சார்ந்த சமூக சீர் திருத்த ஆக்கப் பணிகள்பற்றிய தேர்ச்சிப் படிப்பினை மேற்கொள்வதற்காக எனக்கு விடுக்கப்பட்ட அழைப்பே அது. அப்பாடா—எனக்கு நம்பவே முடியவில்லை. மகிழ்ச்சியில் எனது வேலையையும் மறந்து சிறுபிள்ளைபோல கடிதத்தையும் கொண்டு அன்னையிடம் ஓடினேன். அதனைக் கண்ட என் தாய் ஆனந்தத்தில் அமிழ்ந்தார் சற்றுப்பின்னர் ''நீ இவ்வளவு காலமும் செய்த சேவைக்கும், பட்ட கஷ்டங்களுக்கும், ஏங்கிய நினைவுக்கும் ஆண்டவனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வழைப்பைத் தந்துள்ளார் எங்கள் குல விநாயகர் அருள் தான் ஆண்டவனுக்கு நன்றி கூறி அலுவல்களைச் சீக்கிரம் பார்'' என்று கூறிக்கொண்டிருக்கையில், வாழ்க்கையிலே இளைய வயதில் பொறுப்பான வேலைகளில் நான் ஈடுபட்டிருக்கும் நிலையில், எமது பண்ணையில் தானுகவே தொடர்பு கொண்டு, எனக்கு பலவிதங்களிலும் உதவி செய்து வரும் ஒரு சிறந்த மனப் பான்மையுடைய வியாபார நண்பர் திரு. ந. செல்வத்துரை அவர்கள் வருவதை அவரது A40 மோட்டார் முதற்கண் காட்டியது. அவர் அதினின்று சிரித்த முகத்துடன் இறங்கியதை அவதானித்தேன். அலுவலகத்தில் நுழைந்தவர் 'என் தாயாரைப் பார்த்து' என்னம்மா மலர்வுடன் காண்கின்றீர்கள்' என்ன விசயம் என்றுர். நான் விசயத்தைச் சொல்லுமுன் அன்னையார் அப்படியே ஒப்புவித்தார். 'ஆகா நல்ல செய்தி' அவர் கூறுகிறுர். ''செலவெல்லாம் அவர்கள் பொறுப்பா?'' ஆமாம் நல்ல பொறுத்த கேள்வி. ஏனெனில் அறிவும் அநுபவமும் நிறைந்தவரல்லவா? நான் எனது பணத்தைக் கொட்டி விரயப்படுத்திப் போடுவேன் என்று எண்ணிஞரோ தெரியவில்லை. மகிழ்ச்சிப்புயலில் சிக்கிய எனக்கு ஒரே ஆச்சரியம் — அரசின் தொடர்பற்ற தனிப்பட்ட நிறுவனமாகிய எங்கள் கம்பெனிகளின் சார்பில் வெளிநாட்டில் பயிற்சி பெறும் வாய்ப்பு வரும் என ஒருவரும் நினைத்திருக்க முடியாது. முக்கியமாக இன்றைய சூழலில் அவ்வளவு சுலபமும் அன்று.

இச்சந்தர்ப்பத்தில் ஆண்டவனை ஒரு முறை மனதார நினைத்தேன் — என்ன ஆச்சரியம் இவ்வசனத்தை செங்கதிருக்காக இன்று வரையும் இவ் வேளை — அதாவது இன்று ஆகஸ்ட் 3 மாலை 6-30 மணி எமது கோவில் மணியோசை ஒலிக்கின்றது. ''ஆகா விக்ன விநாயகன் விந்தையிலொன்று இது'' அடுத்து குறித்த இவ் வமெரிக்க நிறுவனத்தை மனமார வாழ்த்துகிறேன். முக்கியமாக, இந்த அமெரிக்க நிறுவனத்தை எனக்கு அறிமுகப்படுத்திய என் இனிய வெளிநாட்டு நண்பர்களை நன்றியுடன் நினைவில் வைக்கின்றேன்.

★ ★ ★

சிறுவயது முதல் அயராத உழைப்பும், பொதுசேவை ஈடுபாடும் உடைய என்னை அந்த உழைப்பும் நல்லவர்களின் தொடர்புமே மேனிலைக்குக் கொண்டு வந்தவை. இதனை என் சிறுபிராயத்தில் தட்டியெழுப்பிய பெரியவர் அமரர் மூகாந்திரம் எஸ். ஏ. வைத்தியலிங்கம் அவர்களை நினைவில் கொள்கின்றேன். அவரின்று உயிருடன் இருந்தால் மட்டற்ற மகிழ்ச்சிக் கடலில் மிதந்திருப்பார். பிறநாடுகளின் பண்ணை வளர்ச்சியைப் படித்தும் புத்தகங்களில் வாசித்து மறிந்த நான், அவ்வழியில் உற்சாகமடைந்து 1969-ம் ஆண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Appropriate Technology Services
121, POINT PEDRO ROAD
...LUR, ...

ஒக்டோபர் மாதம் 20-ம் திகதி செங்கதிர் செல்வர் பண்ணைத் திட்டத்தையும் கல்விச் சேவைகளையும் ஆரம்பித்தேன், இந்த இரு நிறுவனங்கள் ஆரம்பிக்கப்பட்ட அந்தத் திகதியில் ஒரு மகத்துவம் இருப்பதை நான் நம்புகின்றேன்.

என்னைப் பொறுத்த வகையில், என் வாழ்க்கையில் 20 என்ற எண் மிகவும் தொடர்பு கொண்டதாக அமைகிறது: அந்த எண்ணைப் பற்றிய பல சுவையான தகவல்களில் சிலவற்றை நான் இச்சந்தர்ப்பத்தில் தரலாமென நினைக்கின்றேன்.

நான் பிறந்தது செப்டம்பர் மாதம் 20-ந் திகதி. பாடசாலைப் படிப்பின் பின் முதன் முதலாக, ஒரு நேர்முகப்பரீட்சையில் கலந்து கொண்டது 20-9-65 எனக்கு வெற்றியும் கிடைத்தது. ஆமாம் றெக்கிட் அன் கோல்மன் கொம்பனி இலங்கை லிமிட்டெட் என்ற பிறநாட்டு நிறுவனங்கள் ஆரம்பிக்கப்பட்ட நல்ல நாளாக 20-10-69 அமைந்தது. அதிலும் ஒரு சிறப்பு கொழும்புத்துறை மின்சார உபநிலையத்தில் ஒரு விபத்து ஏற்பட்டு சுமார் ஒன்றரை மாத காலமாக மின்சாரம் தடைப்பெற்றிருந்தது. எமது நிறுவனங்கள் ஆரம்பிக்கும் போது மின்சாரம் இல்லை என நான் கவலைப்பட்டேன் ஆனல் என்ன மகிழ்ச்சி இந்த 20-ம் திகதி அதிகாலை மின்சார விநியோகம் சீர்படுத்தப்பட்டு வழமையான விநியோகம் வழங்கப்பட்டது உண்மையிலேயே என்மனதிலும் பலர் மனதிலும் ஏதோ ஒருவித நன்னம்பிக்கையை உருவாக்கியது. என் வெளி நாட்டு பிரயாண சம்பந்தமாக எனக்கு முதலாக வந்த தொடர்புக் கடிதத்தில் காணப்பட்ட திகதி 20 ஜூலை 1971 நான் வெளிநாடு செல்வதனுல் திருமணத்திற்காக தேர்தெடுத்தப்பட்ட திகதி 20 ஒக்டோபர் 1971. இவையெல்லாவற்றிலும் பார்க்க மிக மிகச் சுவாரசியமான செய்தி என்னவென்ருல் பிலிப்பைன நாட்டில் நான் இருந்த சமயம் ஒரு கல்லூரியில் நான் சொற்பொழிவாற்ற வேண்டிய சந்தர்ப்பம் ஏற்படுத்தப்பட்டது. அப்பொழுது என் சொற்பொழிவைக் கேட்டு இரசித்த ஒரு இளம் ஆசிரியை திருமதி மக்வீன் என்னேடு பிரத்தியேகமாகப் பேசவிரும்பினுர். அவரை நான் அவதானித்த பொழுதும் அவரது மலர்ந்த முகம் தந்த வேண்டுகோளை மறுக்காது அவருடனும். அவரின் தோழிகள் சகிதம் அவர்களது ஆசிரியர் அறைக்கு அழைக்கப்பட்டேன். பிலிப்பைன் நகர் சில பாடசாலை வழக்கத்திற்கொப்ப அவ்வறையில் அக்கல்லூரியாசிரியர்களின் பெயரும் அவர்கள் பிறந்த திகதியும் மற்றும் தராதரமும் தெளிவாக எழுதப்பட்டிருந்தது: அதனை நோக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிடத்தே என் கண்கள் என்னை அழைத்த மக்கீனின் பெயரில் மின் குத்திட்டு நின்றது. அங்கே அவர் பெயரின் நேரே எழுதப் பெற்றிருந்தது. 20-9-43 ... ! எனக்கு அளவிலா ஆச்சரியம்; நான் பிறந்த அதே ஆண்டு, அதே மாதம், அதே நாள் நான் அந்த அதிசயத்தை அவர்களோடு பகிர்ந்து கொண்டேன் ஒரே ஆரவாரம். இதையறிந்த



புரொபெசர் டி. லா. குறூஸ் உடனே அங்கிருந்தவர்களை நோக்கி "It is late for us to do anything. It is a pity that both are already married" என்றார், ஒரே சிரிப்பு - இதன் பின்னர் நான் எங்கு சென்றாலும் இக்கதையைச் சொல்ல புரொபெசர் டி. லா. குறூஸ் தவறமாட்டார். அதுமட்டுமா எனது முதற் பிரயாணத்தை வெற்றிகரமாக முடித்து என் சொந்த நாட்டில் திரும்பக் காலடி வைத்தது — அதாவது கட்டுநாயக்காவை வந்து சேர்ந்தது — 20-2-1972; இந்த 20ம் திகதியின் மகத்துவத்தினாலோ என்னவோ எனக்கு இவ்வரிய வாய்ப்புகள் கிடைக்கின்றது என நான் கருதுவதுண்டு.

பிரயாணத்திற்கு ஏற்பாடுகள் தடல்புடலாக ஆரம்பமானது. பிரயாணஞ் செய்வதானால் சும்மாவா — பாஸ்போட் – விசா – இப்படிப் பல பல - பிறநாடுகளில் இவை படைவது சுலபம். எமது நாட்டில் 'அப்பப்பா' இதற்கென தனிக்கதை வடிக்கலாம்; இந்த ஏற்பாடுகள் ஒருபுறமிருக்க.

எமது வீட்டில் — நிறுவனத்தில் ஆரவாரம் அதிகரிக்கின்றது. நண்பர்கள் — உறவினர்கள் — மகிழ்ச்சிகரமான சம்பவங்கள். சிலர் உண்மையில் மகிழ்ச்சி தெரிவிக்க வந்தனர், கூடினர் வாழ்த்தினர், ஒரு சிலர் இது எப்படி? எவ்வாறு? என்று "பூராயம்" காண வந்ததும் நான் அறிவேன். நமக்கென்ன அப்படி அப்படியே அறிவித்தல் கொடுத்தேன்.

இத்தனைக்கு மேலாக ஒரு பெரிய பிரச்சனை என் முன்னால் பெரியவர்களால் எழுப்பப் பட்டது.

அது—



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது திருமண விசயம் தான்.

எங்கள் நாட்டுப் பெற்றோருக்கு தமது பிள்ளைகளில் எவ்வளவு நம்பிக்கையிருந்தாலும் அவர்களை எவ்வளவு நன்முறையில் வளர்த்திருந்தாலும் வெளிநாடுகளுக்குப் போகும்போது ஒருவித அவநம்பிக்கை ஏற்படுகின்றதே? அது என்மனதில் சிறிது தாக்கினாலும் என்ன செய்வது அவர்கள் விருப்பத்துக்கிணங்குவது எனத்திர்மானித்தேன்.

''வெளியில் போய் வழியில் துணைதேடி வந்து விடுவார்கள் என்ற பயத்தில் போகுமுன்பே துணையை இணைத்து விட்டால்'' என்று எப்மவர் எண்ணுவது பிழையில்லையெனினும் சிரிக்காமலும் இருக்கமுடியவில்லை.

ஏனெனில் — துணையைக் கண்டும் வெளித்துணையோடு வந்தால் என்னகதி என்றும் அலட்டாமல் இருக்கமுடியவில்லை.

அதுபோக —

அவசர அவசரமாக எனது திருமணம் 20-10-71—ல் நடைபெற்றது.

எனது மாமன் மகள் சரஸ்வதி துணைவியானாள் — பிரயாணத்துக்கேற்ற ஒழுங்குகளும் ஓரளவு நிறைவேறின.

ஆனால் —

26-10-71-ல் அதிர்ச்சிதரும் செய்தி பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சினால் அனுப்பப்பட்டிருந்தது. அதில் 71-ம் ஆண்டு ஏற்பட்ட கிளர்ச்சிகளின் எதிரொலியாக ''எக்சிட் பெர்மிட்'' வழங்குவதற்கு, நான் தனிப்பட்ட நிறுவனத்தைச் சார்ந்தவன் என்ற முறையினாலும் இந்த அழைப்பு அரசாங்கத்தினூடாக அனுப்பப்படாததினாலும் அனுமதி வழங்குவதற்கு அதிகாரமில்லையெனவும் எதற்கும் உடன் தன்மை தழைத்த அந்நாட்டினருடன் நேரடியாகத் தொடர்புகொள்ளும்படியும் கேட்கப்பட்டிருந்தது.

கலங்கினேன் — ஆனால் களைக்கவில்லை பலருடன் தொடர்பு கொண்டேன். 6-1-71-ல் நான் போவதற்கான சகல ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருந்தது. இதற்கிடையில் எல்லா ஏற்பாடுகளும் ஆக வேண்டும் என்னசெய்வது.

புதிதாகச் சேர்ந்தவளையும் இழுத்துக் கொண்டு கொழும்பிற்கு விரைந்தேன். எனது நண்பர்கள் எல்லோரும், உறவினர் அனைவரும் ஒருங்கே முயற்சி — டாக்சிகள் ஓடின - ஊரோட்டம் கடைசியில் நான் பிரதம மந்திரியை காண அனுமதி கேட்டேன்.

இதற்கிடையில் நல்லோரின் முயற்சியினால் என்னுடைய சொந்த விண்ணப்பத்தில் பிர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம மந்திரியின் பிரத்தியேக அனுமதி எனது உண்மை முயற்சிக்கு விடையாகியது.

புறப்படுவதற்கான எல்லா ஏற்பாடுகளும் நிறைவேறின.

அந்த நாள் —

பொன்னாள் —

கிழக்கிலே செங்கதிர் உதயமாகிய அந்த நன்னாள் 6-11-1971.

வீட்டில் பூரண கும்பம் — உறவினர் குலாம் — ஒரேயாரவாரம் மகிழ்ச்சிக் கடலில் யாவரும் — என் மகிழ்ச்சி — நேரத்திற்கு நேரம் கலக்கமானது — நான்கு மாதம் வெளியில் இருக்க வேண்டியுள்ளது இன்பத்திலும் ஒரு துன்பம் உண்டாகவே செய்தது

எனினும்!

அடுத்த இதழில்


வளமான
விவசாயம் !

பொலிவான
அறுவடை !!

சீரான
சமுதாயம் !!!

நாட்டின்
நலனாகும் !!!!

செங்கதிர்ச் செல்வர் பண்ணை
கொழும்புத்துறை - யாழ்ப்பாணம்




Appropriate Technology Services
121, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA
NO [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org